## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

02.02.2017 குழந்தை இயேசு காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட விழா - திருப்பலி
02.02.2017 உலக துறவறத்தார் தினம் - செபவழிபாடு
03.02.2017 தூய ப்ளேஸ் - திருப்பலி
04.02.2017 தூய அருளானந்தர் - திருப்பலி
05.02.2017 ஆண்டின் பொதுக்காலம் 5ம் ஞாயிறு - திருப்பலி
06.02.2017 தூய கொன்சாலோ கார்சியா - திருப்பலி
08.02.2017 தூய ஜோஸ்பின் பக்கித்தா - திருப்பலி
10.02.2017 தூய ஸ்கொலாஸ்திக்கா நினைவு - திருப்பலி
11.02.2017 தூய லூர்தன்னை திருவிழா - திருப்பலி
12.02.2017 ஆண்டின் பொதுக்காலம் 6ம் ஞாயிறு - திருப்பலி
14.02.2017 தூய சிரில் மற்றும் மெத்தோடியுஸ் - திருப்பலி
19.02.2017 ஆண்டின் பொதுக்காலம் 7ம் ஞாயிறு - திருப்பலி
21.02.2017 தூய பீட்டர் தமியான் - திருப்பலி
23.02.2017 தூய போலிக்கார்ப் விழா - திருப்பலி
26.02.2017 ஆண்டின் பொதுக்காலம் 8ம் ஞாயிறு - திருப்பலி

## பகுதி 2: விசுவாசத்தில் வளர...

துறவற அர்ப்பண வாழ்வு - சிறு விளக்கம்
துறவற வாழ்வின் மேன்மைகள்
திருச்சபை வரலாற்றில் துறவறத்தாரின் பெரும் பங்கு
திருச்சபை செய்திகள்

# பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

**02.02.2017 குழந்தை இயேசு காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட விழா திருப்பலி**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

**முன்னுரை**

யூத மக்கள் தங்களுக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகளை எருசலேம் தேவாலயத்தில் இறைவனுக்கு காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல் சட்டமாக இருந்தது. அதன்படி இயேசு பிறந்து நாற்பது நாட்களானபின் மரியாவும், யோசேப்பும் அவரைத் தேவாலயத்திற்கு எடுத்துச் சென்றார்கள். பலனைப் பாராமல் பரமனின் கரங்களில் முழு அர்ப்பணமாக்குவதே உண்மைக் காணிக்கை. இதன்பொருள் புரியாமல் பல நேரங்களில் கடவுளை வியாபாரியாக்கி, அவர் கருணையை கடைச்சரக்காக மாற்றிவிடுகிறோம். நம் வாழ்வில் ஆண்டவருக்காகவும் பிறருக்காகவும் சில தியாகங்களை நாம் செய்யும்போது நமக்கு இறையாசீர் கிடைக்கின்றது. பாவத்தை விட்டொழிக்கும்போது அமைதியும், சோம்பலை விட்டு, உழைக்கும்போது உணவும், உலக சிற்றின்பத்தில் நேரத்தை விரயமாக்குவதை விட்டு, செபிக்கும்போது இறை பிரசன்னமும், நம் உடலையே இறைவனுக்குக் காணிக்கையாக்கி செபிப்பதன்மூலம் இறை விருப்பதை அறியவும், தூய வாழ்வு வாழத் தேவையான அருள் நமக்குக் கிடைக்கும். இறைவனுக்காக நம்மையே நாம் இழக்கும்போது நித்திய வாழ்வு பரிசாகக் கிடைக்கின்றது. நித்திய வாழ்வை நிரந்தரமாக நாம் பெற்று, இறைமக்களாக வாழ்வதற்காக இறைமகன் நமக்காக மனிதனாகப் பிறந்து, காணிக்கையாக்கப்படுவதை நம் உள்ளத்தில் இருத்தி நம்மை நாமே காணிக்கையாக்கி பக்தியோடு இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

தியாகச் சீலரே எம் இறைவா, உமது ஆவியின் ஆற்றலால் வழிநடத்தப்படும் திருச்சபையை உலக மக்கள் அனைவருக்கும் மீட்பின் செய்தியையும், நற்செய்தியையும் அறிவிக்கும் பணியில் ஆன்மீக வாழ்வுக்குரிய வகையில் வழிநடத்திக் கொண்டிருக்கும் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர், வேதியர், பொதுநிலையினர் அனைவரையும் உமது வரங்களைத் தந்து நிறைவான ஆசி வழங்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.

ஆற்றல் மிக்க இறைவா, இளைஞர் இளம்பெண்கள் சோதனையிலும், தீய நெறியிலும் வீழ்த்திட வரும் பலவிதக் கவர்ச்சிகள், அசுத்த ஆவிகளின் பிடியிலிருந்து விடுபட்டு, உம்மீது கொண்ட நம்பிக்கையில் வருகின்ற தீமைகளை விரட்டியடிக்கும் சக்தியைத் தரும்படி உம்மை மன்றாடுகிறோம்.

குணமளிக்கும் மருத்துவரே இறைவா, இன்றைய சுகாதார சீர்கேட்டால், பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டு வருந்திடும் பணியாளர்களை குணமாக்கிடவும், நோயினைத் தடுப்பதற்கான காரணங்களை அறிந்து அரசும் மக்களும் சரிவர பின்பற்றவும் அருள்புரியும்படி ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

**02.02.2017 உலக துறவறத்தார் தினம் செபவழிபாடு**

சகோ. வின்செண்ட் சச.,

**தூய ஆவியாரின் பாடல்: ஓ பரிசுத்த ஆவியே...**

**முன்னுரை**

இறைவனின் அளப்பறியா அன்பை அறியாத மானிடத்திற்கு மீட்பின் நற்செய்தியை கொண்டு செல்ல இறைமகன் ஏற்படுத்தியது இந்த துறவறப் பணி. உண்மையாகவே இந்த துறவற பணி ஒரு தனி மனிதனின் அர்ப்பணிப்பையும் ஆர்வத்தையும் உள்ளடக்கி இருக்கிறது. விவிலியத்தல் நாம் காணும் இறைவாக்கினர்களின் அழைப்பு நமக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது. கருவில் நம்மை தேர்ந்த இறைவன் அவர்பணி செய்ய நம்மை ஒவ்வொரு நாளும் அயராமல் அழைப்பு விடுக்கிறார். உலக துறவறத்தாரின் தினத்தை சிறப்பிக்கும் இத்தருணத்தில் இவ்வுலகிலுள்ள அனைத்து துறவறத்தாருக்காக செபிப்போம். இறைவனின் அழைப்பை உணர்ந்த இவர்கள் மனித குலத்திற்கு இறையேசுவின் உண்மையான சாட்சியாக இருந்து வழி தவறிய ஆடுகளை ஒன்று சேர்த்து நற்பணி

புரிந்திட இந்த செபவழிபாட்டில் செபிப்போம். மேலும் நம் குடும்பங்களில் இறைவனின் அழைப்பை நம் பிள்ளைகளுக்கு நன்கு வளர்த்திடவும் வேண்டுவோம்.

**மன்னிப்பு வழிபாடு**

ஆண்டவர் இயேசுவின் மனநிலையை நம் உள்ளத்தில் கொண்டு நமது கிறிஸ்துவ/துறவு வாழ்வில் பலவிதங்களில் நம்மிடம் மாற்றங்களை ஏற்படுத்தும் வாய்ப்புகளை நம் ஆண்டவர் ஏற்படுத்தி தந்திருந்தாலும் அந்த வாய்ப்புக்களை ஏற்காமல் மாற்றத்தை உணர்ந்துக் கொள்ளாத நிலையை நினைத்து ஆன்ம சோதனை செய்து பார்ப்போம். (சில வினாடிகள் அமைதியாக சிந்தித்தல்)

- படைக்கப்பட்ட நாங்கள் உமது அன்பின் அழைப்யை உணராத தருணங்களுக்காக
  ஆண்டவரே இரக்கமாயிரும்
- உம் அழைப்பை பின்பற்றி நேர்த்தியான முறையில் வாழாத தருணங்களுக்காக
  கிறிஸ்துவே இரக்கமாயிரும்
- எங்கள் மத்தியில் இறையழைத்தல் வளர உறுதுணையாக இல்லாத தருணங்களுக்காக
  ஆண்டவரே இரக்கமாயிரும்

**வாசகம்: மாற்கு16:15-18**

**பாடல் : எனையனுப்பும் தெய்வமே...**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. துறவறத்தின் உந்துதலே எம் இறைவா, திரு அவையை வழிநடத்திவரும் எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்களை உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம், தங்களின் துறவு வாழ்வில் சந்திக்கும் இடையூறுகள், சவால்கள், எதிர்ப்புகளை உமது இறைவார்த்தையின் ஒளியில் நிர்மூலமாக்கி தங்களின் பணிவாழ்வில் உமது ஒளி வீசச்செய்ய வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

2. துறவறத்தையும் குருத்துவத்தையும் திருநிலைப்படுத்திய எம் இறைவா, உமது பணியே எம் வாழ்வு என்று தங்களையே குருத்துவப் பணிக்காக அர்ப்பணிக்கத் தயாரித்துக் கொண்டிருக்கும் குரு மாணவர்களுக்காக மன்றாடுகின்றோம், தாங்கள் தேர்ந்திருக்கும் இப்பணி ஏழ்மையும், கற்பும், தாழ்ச்சியும் நிறைந்த வாழ்வு என்பதை உணர்ந்து தூய ஆவியின் துணையுடன் முழுமையாகவும், நிறைவாகவும், அழைப்பின் மேன்மையை உணர்ந்து வாழ வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.

3. திருக்குடும்பத்தில் துறவு நிலையை ஏற்படுத்திய இறைவா, எங்கள் குடும்பங்களை உம்பாதம் அர்ப்பணிக்கின்றோம், குடும்பங்கள் ஒவ்வொன்றும் உமது பிரசன்னத்தின் இருப்பிடம் என்பதை உணர்ந்து, தூய்மையாகவும், ஒற்றுமையாகவும், அன்பாகவும், வாழ்ந்து தங்களின் அடுத்திருப்பவருக்கு உமது அன்பை பகிர்ந்து அவர்களும் உம்மை ஏற்றுக்கொள்ள எடுத்துக்காட்டான வாழ்வு வாழ வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.

4. அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு என்று மொழிந்தவரே, எங்கள் குடும்பங்களில் இறையழைத்தலுக்காக செபிக்கின்றோம், "என் பணிக்காக யார் போவார்" என்று தாகத்தோடு மொழிந்தவரே, எங்கள் குடும்பங்களில் உள்ள பிள்ளைகளுக்கு உமது அன்பையும், உமது பணியின் மேன்மையையும் எடுத்துக்கூறி அவர்களின் உள்ளத்தில் இறையழைத்தலை உணரவைக்க எங்களுக்கு கற்றுத்தாரும். இறைப்பணியே முதன்மையானது என்பதை நாங்கள் உணர வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.

**இறுதி செபம்**

இறைவா, இந்த துறவறத்தாரின் தினத்தில் உம் அழைப்பை உணர செய்தமைக்காக நன்றி கூறுகிறோம். பிறந்திருக்கும் புதிய ஆண்டில் உமது இரக்கப் பெருக்கத்தினால் அருள் பெற்று துறவறத்தில் மேன்மைக் காணவும் உமது இரக்கத்திற்கு சான்று பகரவும் உம் திருமகன் இயேசுகிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.

**அன்னை மரியாள் பாடல் :** மாதாவே துணை நீரே...

**03.02.2017 தூய ப்ளேஸ் திருப்பலி**

திருமதி. ராணி வில்சன்

முன்னுரை

தூயகத்திற்குள் வரவேற்கப்பட்டு ஆண்டவரின் முன் நிற்கும் புனிதர்கள் கிறிஸ்து வழியாக கிறிஸ்துவோடு கிறிஸ்துவில் தந்தையிடம் அயராது பரிந்து பேசிக்கொண்டிருக்கின்றனர். இதனால் அவர்களின் சகோதர அக்கறை நமது பலவீனத்திற்குப் பெரிதும் துணைபுரிகிறது என்று திருச்சபை நமக்கு கற்பிக்கிறது. இன்று நாம் கொண்டாடும் புனித ப்ளேஸ் ஆர்மீனியா (துருக்கி) நாட்டில் செபாசுடே ஆயராக இருந்து, சிலினியசு கொடுங்கோல் மன்னன் காலத்தில் இயேசுவுக்காக இரத்தம் சிந்தி இறந்தார்.

கிறிஸ்தவர்களை நசுக்கும் போராட்டம் நடைபெற்றபோது இப்புனிதர் தேவ ஏவுதலால் காட்டுக்குள் சென்று தவமுனிவராக குகையில் தன் வாழ்நாட்களை செலவழித்தார். இவரைச் சுற்றி விலங்குகள் இருந்தன. அவைகள் உடல்நலக்குறைவு மற்றும் காயமுற்ற நிலையில் இருந்ததால் இவர் குணப்படுத்தி வந்தார். இதனால் விலங்குகள் அனைத்தும் இவரது ஆசிருக்காக காத்திருந்தன. வேட்டைக்காரர்கள் வந்து இவரைப் பிடித்து விலங்கிட்டு மன்னனிடம் கொண்டு சென்றனர். போகும் வழியில் மீன்முள் தொண்டையில் சிக்கி உயிருக்குப் போராடிய ஒருவரை பார்க்கிறார். அவரது தாய் அழுவதைப் பார்த்து இவர் செபிக்க மீன் முள் எகிறி விழுந்து அவர் குணமானார். இதனால் தான் திருச்சபையில் பல பகுதிகளில் இந்நாளில் தேன்திரிகளை கையில் ஏந்தி தொண்டை நோய் குணம் பெற செபிக்கின்றனர். நாமும் செபிப்போம், இப்புனிதரின் மன்றாட்டில் இறைவன் யாருக்கெல்லாம் தொண்டைப் புண்ணால் அவதியுறுகிறார்களோ அதன் எல்லா நோய்களிலிருந்தும், பல தீங்குகளிலிருந்தும் விடுவிப்பாராக, என்ற சிறிய செபத்தோடு இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

உன்னதரே இறைவா, எம் திருத்தந்தைக்காக மன்றாடுகிறோம். காலத்தின் அறிகுறிகளை அறிந்து அவரை எமக்களித்துள்ளீர். அவரின் எளிமை, பேச்சு, செயல்கள் அனைத்தையும் ஆசீர்வதியும். எம் திருஅவை புதுப்பொலிவு பெற்று அனைத்து பணியாளர்களும் உடலாலும், உள்ளத்தாலும் தூய்மை பெற வேண்டும். அவர் உன்னத மேன்மைப் பெறவும், அவர் வழியாக திருஅவை புத்துயிர் பெற்று அதன்மூலம் இச்சமூகம் மறுமலர்ச்சி பெற்ற சமூகமாக மாறிட அவரை உம் தூய ஆவியால் நிரப்பிட உம்மை மன்றாடுகிறோம்.

ஊற்றுத் தண்ணீரே, எங்கள் சென்னை மயிலை உயர் மறைமாவட்டத்தை அர்ப்பணிக்கின்றோம். அதன் மறைவட்டமும், அதிலுள்ள அனைத்துப் பங்குகளையும் ஆசீர்வதியும். நல்ல ஆரோக்கியமான சூழல், சகோதர மனப்பான்மை, ஒன்றுப்பட்ட இதயம், தவவாழ்வு, செபத்தில் குணமளிக்கும் வல்லமை அனைத்தையும் அளித்து வழிநடத்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

நல்லாயனே இறைவா, கிறிஸ்தவர்களை வந்தேரிகள் எனவும், மதமாற்றம் புரிகிறோம் எனவும் இன்னும் பல குற்றச் சாட்டுகள் கூறியும் நசுக்க விழைகிறார்கள். இவற்றின் மத்தியிலும் உம் அழைப்பின புனிதத்தை உணர்ந்து எங்களுக்கு தீங்கிழைக்கும் எந்த சக்தியும் முறியடிக்கப்பட்டு நாங்கள் நிம்மதியாக வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

ஏங்குவோருக்கு ஆறுதலே இறைவா, படிப்பு, வேலை, தொழில், திருமணம், வளமான வாழ்வு, ஆராக்கியமான உடல், ஒற்றுமை, சமாதானம், மகிழ்ச்சி இவையனைத்தும் இல்லையே என ஏங்கும்

உள்ளத்தோருக்கும், குடும்பத்திற்கும் அனைத்து மக்களுக்கும் நிறைவாக நீரே அளித்து அவர்களை பாதுகாத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**04.02.2017 தூய அருளானந்தர் திருப்பலி**

திருமதி. ராணி சம்பந்தன்

**முன்னுரை**

இறை இயேசுவில் பிரியமான இறைச்சமூகமே இன்று நாம் தூய அருளானந்தர் என்னும் புனிதரின் நினைவு நாளை கொண்டாடுகிறோம். போர்ச்சுக்கல் நாட்டில் லிஸ்பன் நகரில் 1647ல் பிறந்த இவர் இயேசு சபையில் சேர்ந்து இந்தியாவிற்கு வந்து, தமிழ் கற்று, நமது தமிழகத்தின் பல தென்மாவட்டங்களில் சேவை புரிந்தவர். இராமநாதபுர மன்னர் 1664ல் இவரை கைது செய்து அவரது சொந்த நாட்டிற்கு அனுப்பி விட்டார். அங்கு இவரை பேராயராக்க முயற்சிகள் நடந்தன. அந்த முயற்சியில் அருளானந்தருக்கு விருப்பம் இல்லாதபடியால் திரும்பவும் இந்தியாவிற்கு வந்து இராமநாதபுரத்தில் சேவை செய்தார். இவரது சேவையும் உழைப்பும் அரச குடும்பத்தினரான தடியத்தேவர் என்பவரை கிறிஸ்தவராக்கியது. அதன் விளைவாக தனது மனைவியர்களில் முதலாமவளை மட்டும் தன்னுடன் வைத்துக்கொண்டு மற்றவர்களை விலக்கிவிட்டார். இதனால் கோபமடைந்த அரசனின் உறவினரான அவர்களில் ஒரு பெண் அரசனிடம் முறையிட்டதால் 1693, பிப்ரவரி 4ம் நாள் விபூதி நாளன்று, நமது தூய அருளானந்தரின் தலையை வெட்டிவிட உத்தரவிட்டான். இன்றும் வெட்டுண்ட இடத்தின் மண் சிவப்பாகவே காணப்படுகிறது. இதன்மூலம் புனிதரின் மகத்துவம் அறிவோம். தியாகத்தின் சின்னமாக வாழ்ந்து இரத்த சாட்சியாக உயிர் துறந்த இவரை பின்பற்றி சுயநலம் துறந்து பிறர் நலம் காக்க நம்மை தூய்மையாக்குவோம். பக்தியோடு அவர் நினைவோடு இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

உறுதியூட்டும் இறைவா, உடன்படிக்கையின் வழியாக உருவான திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் மற்றும் அழைக்கப்பட்டவர்களாகிய யாம் அனைவரும் உம் திருவுளத்தை ஏற்று தொண்டு செய்யும் மனப்பான்மை பெற்றவர்களாய், உறுதியுள்ள கிறிஸ்தவர்களாக வாழ உம்மை மன்றாடுகிறோம்.

இரக்கத்தின் இறைவா, அன்றாட தேவைகளைகூட நிறைவு செய்து கொள்ள முடியாமல் தவிக்கும் எளிய மக்களுக்கு அவரவர் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளக் கூடிய நல்ல சூழ்நிலையை உருவாக்கி அன்பும் பரிவும் அளிக்க உற்ற துணையாளராக இருக்க உம்மை மன்றாடுகிறோம்.

எல்லாம் வல்ல இறைவா, நாட்டின் பொறுப்பாளர்கள், மக்கள் நலமுடன் வாழ கொண்டுவரும் பல அரிய திட்டங்களை ஆராய்ந்து தெளிந்து, அதற்குரிய பாதுகாப்பான வழிகளை செம்மைப்படுத்தி செயல்படுத்த தேவையான ஆற்றலை வழங்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.

பரிவும் பாசமும் உள்ள இறைவா, அன்பகங்களிலும், முதியோர் இல்லங்களிலும் வாழும் மக்கள் அனைவருக்கும் தேவைக்கேற்ப உணவும் உடையும் தந்து அவர்கள் எதிர்பார்க்கும் பாசமும் பரிவும் பெற்று மகிழ, நீரே அவர்களை உமது திருக்கரத்தில் ஏந்தி பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**05.02.2017 ஆண்டின் பொதுக்காலம் 5ம் ஞாயிறு திருப்பலி**

திரு. ஜான் சுரேஷ்

**முன்னுரை**

இறை இயேசுவில் பிரியமானவர்களே, இன்று நம்மை பொதுக்காலம் 5ம் ஞாயிறை கொண்டாட திருச்சபை அழைப்பு விடுக்கிறது. இன்றைய வாசகங்களும், நற்செய்தியும் நமக்கு அளிக்கும் செய்தி இறைவனின் வல்லமை மிகுந்த செயல்பாடுகளை நமக்கு தெளிவுப்படுத்துகிறது. முதல் வாசகத்தில் இறைவனின் இரக்கத்தையும் பேரன்பையும் நமக்கு எடுத்துரைக்கிறது. இரண்டாம் வாசகத்தில் நம்பிக்கைக்கு அடிப்படையாக அமைவது மனித ஞானம் அல்ல, கடவுளின் வல்லமையே என்பதை மிகவும் அழுத்தமாக தெளிவுப்படுத்துகிறது. நற்செய்தியில் நமதாண்டவர் இயேசு நமக்கு உப்பு மற்றும் ஒளியின் உவமைகளை கொண்டு நமக்கு நமது செய்தியை எடுத்துரைக்கிறார். எனவே நாமும் உலகிற்கு

உப்பாகவும், ஒளியாகவும் இருக்க வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம். இறையருள் பெருவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

அன்பு தந்தையே இறைவா, எம் திருச்சபைக்காக ஒவ்வொரு நாளும் தங்களையே அர்ப்பணிக்கும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர், பொதுநிலையினர் ஆகியோரை உம் பாதம் சமர்ப்பிக்கிறோம். அவர்களை நிறைவாக ஆசிர்வதித்து அவர்களுக்கு தேவையான ஆற்றலை அளிக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.

நல்லாயனே எம் இறைவா, பல்வேறு இடையூறுகளால் அவதியுறும் விவசாயிகளுக்கு ஆதரவாக இருந்து அவர்களுக்கு தேவையான நல்ல மழை வளத்தை தந்து விவசாயம் பெருக போதுமான அருள் வளத்தை தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

பேரொளியான எம் இறைவா, 10 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் எழுதவிருக்கும் அரசு தேர்வுக்கு முறையான தயாரிப்பு செய்து நற்சிந்தனையோடு தேர்வினை எழுதி நல்ல மதிப்பெண்கள் பெற்று வாழ்வில் மகிழ்ச்சியோடு முன்னேற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

இறையருளின் ஊற்றே எம் இறைவா, இங்கு கூடியுள்ள அனைவரின் கருத்துக்களுக்காக உம்மை மன்றாடுகிறோம். உமது விருப்பப்படி நாங்கள் வாழ்வில் எப்போதும் நல்ல எண்ணங்களுடனும் முற்போக்கு சிந்தனையுடனும் வாழ தேவையான அருள் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

**06.02.2017 தூய கொன்சாலோ கார்சியா திருப்பலி**

திருமதி. டிலைலா சேவியர்

**முன்னுரை**

ஜப்பான் நாட்டில் நாகசாகியில் 1897ம் ஆண்டு பால் மிக்கி என்பவரும் அவரோடு மற்ற 23 பேரும் மறைசாட்சிகளாய் இறந்தனர். இவர்களில் 3பேர் இயேசு சபையினர், 6பேர் பிரான்சிஸ்கன் சபையினர், 7பேர் புதிதாக மனந்திரும்பிய இல்லற வாசிகள் மற்றும் இளைஞர்கள். இவர்களுள் ஒருவர் இந்தியாவை சார்ந்த கொன்காலோ கார்சியா நாகசாகி மலைக்குன்றின்மீது 26 சிலுவைகள் தயாராக வைக்கப்பட்டிருந்தன. இவற்றில் ஒவ்வொன்றுக்கும் அருகில் அதை மறைசாட்சிகளுடன் சேர்த்துக்கட்டி நிறுத்துவதற்கு குழிகள் தோண்டப்பட்டிருந்தன. ஒவ்வொரு வேத சாட்சியின் உடலிலும் ஈட்டியைப் பாய்ச்ச ஒரு கொலையாளி நியமிக்கப்பட்டிருந்தனர். ஒவ்வொரு மறைச்சாட்சியின் உடலிலும் 2 ஈட்டிகளால் மார்பு வழியாக (X வடிவில்) துளைக்கப்பட வேண்டியிருந்தது. ஒருபுறம் துளைக்கப்பட்டு மறுபுறம் ஈட்டி வரவேண்டும்.

மறைசாட்சிகள் இந்த குன்றுக்குள் மகிழ்ச்சியோடு "தெதேயும்" என்ற நன்றிப்பாடலைப் பாடிக்கொண்டு வந்தடைந்தார்கள். பின்னர் ஒவ்வொருவராக சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்டனர். கிறிஸ்துவுக்காக எங்களை கொல்பவர்களை மன்னிக்கிறேன் என்று சொல்லி குருதி சிந்தி உயிர் துறந்தனர். கல்வாரியில் பலியான கிறிஸ்துவின் பெயருக்காகக் குருதியைச் சிந்தினார்கள் என்பதை யாரால் மறுக்க இயலும்? இறை இயேசுவில் இனியோரே, இன்றைய நாளின் புனிதர்களாகிய இந்த மறைசாட்சிகளை நினைவில் கொண்டு இத்திருப்பலியில் இறைவனோடு புனிதர்கள் கொண்டுள்ள நெருங்கிய உறவாலும் அவர்களோடு நாம் கொண்டுள்ள அன்புறவோடும், நம்மை இணைக்க இத்திருப்பலியில் அனைவரும் இணைந்து செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் ஆகிய அனைவரும் ஆயனில்லா ஆடுகள்போல தவிக்கும் மக்கள்மீது பரிவுகொண்டு அவர்களை இயேசுவின் அன்பான தூய பாதையில் வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

நம்பிக்கையின் நாயகனே இறைவா, எங்களையும் எங்கள் சிந்தனை, சொல், செயல் அனைத்தையும் உம் பாதம் வைக்கிறோம். அவற்றை உமது கரத்தால் தொட்டு ஆசிர்வதியும். உமது தூய ஆவியைப் பொழிந்து உம் பிள்ளைகளாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

அதிசயங்களின் தேவனே இறைவா, திருச்சபையின் அங்கங்களாக இருக்கும் இளைஞர்கள், திருச்சபையைக் கட்டியெழுப்பும் சிறந்த ஊழியர்களாக திகழ அவர்களுக்கு வேண்டிய ஞானத்தையும், இறைபற்றும் நிறைவாக பொழிந்து ஆர்வம் நிறைந்தவர்களாக திருச்சபைக்கு செயலாற்ற வேண்டிய திறமையை அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

**08.02.2017 தூய ஜோஸ்பின் பக்கித்தா திருப்பலி**

திரு. ஜான் அலெக்சாண்டர்

**முன்னுரை**

அன்புக்குரியவர்களே, இன்று திருஅவையானது "எங்கள் கறுப்புத் தாய்" என எல்லோராலும் அழைக்கப்படும் ஜோஸ்பின் பக்கித்தாவின் விழாவை கொண்டாடுகிறது. ஆப்பிரிக்கரான இவர் வழக்கம் போல் கடத்தலுக்குள்ளாகும் ஆப்பிரிக்க ஏழைகளுள் ஒருவராக அடிமைச் சந்தையில் விற்கப்பட்டு, உடல், மன ரீதியில் பல கொடுமைகளை சந்தித்தார். சூடானில் இருந்த இத்தாலியைச் சார்ந்த கலிஸ்தோ என்பவரால் அதிக விலை கொடுத்து வாங்கப்பட்டு இத்தாலியில் அவரது வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். அங்குதான் பக்கித்தா முதன்முதலில் அன்பை, அமைதியை கண்டுணர்ந்தாள். 1890ல் திருமுழுக்குப்பெற்று, பின்னாலில் இறைப்பணிக்காகத் தன்னையே கையளித்தாள். ஐம்பது ஆண்டுகள் கடவுளின் அன்புக்குச் சாட்சியாக வாழ்ந்தார். அவரது வார்த்தைகள், "நல்லவராக இருங்கள், ஆண்டவரை அன்பு செய்யுங்கள், அவரை அறியாதவர்களுக்காக மன்றாடுங்கள், அவரை அறிவியுங்கள். கடவுளை அறிவதே மிகச் சிறந்த அருளாகும்" என்பதே. எங்கள் அன்னை மரியே... எங்கள் அன்னை மரியே.. என்று உச்சரித்த உதடுகளுடன் 1947 பிப்ரவரி 8ல் மறைந்தார். 2000ல் திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் இவரை புனிதராக உயர்த்தினார். ஆதிக்க சக்திகளின் முகவரியாக இன்றும் தொடரும் அடிமை முறைக்கும், ஆள்கடத்தல்களுக்கும் இலக்கானவர்களுக்காக சிறப்பாக அருட்தந்தை டாம் ச.ச. அவர்களுக்காக புனித ஜோஸ்பின் பக்கித்தாவின் வழியாக மன்றாட தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. நல்ல ஆயன் நானே, நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார் என்று சொல்லி மனமுவந்து பாடுகளை, சாவைச் சந்தித்த அன்பு இயேசுவே, துன்பங்களை கண்டு பின்வாங்காமல், அதை எதிர்த்து போராடும் துணிச்சலும் ஆற்றலும் எமக்குத்தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. இயேசுவின் மீது கொண்ட விசுவாசத்தினால் இன, இட, நிலை, பால் வேறுபாடுகளைக் கடந்து இறைமக்கள் ஆகியுள்ள நாங்கள் அனைவரும் இறைவனின் உன்னதக் கொடையான ஒற்றுமையையும் சமாதானத்தையும் அனுபவிக்க அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் தந்தையே, உமது முன்னிலையில் எமக்கு எப்போதும் நிறைவான மகிழ்ச்சி உண்டு, உமது வலப்பக்கத்தில் எப்போதும் பேரின்பம் உண்டு என்பதை நாங்கள் உமது வாழ்வின் வழியை அறிந்து கொள்ளவும் உன்னதக் கொடையான ஒற்றுமையையும் சமாதானத்தையும் அனுபவிக்க அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. இறைவா அமைதி தேடி ஏங்குகின்ற மக்களின் வாழ்வில் இன்னும் கோலோச்சுகின்ற அடிமைத்தனங்கள் மறைந்து சமத்துவமும், அன்பும், சுதந்திர அனுபவமும் விடிந்திட அதற்காக நாங்கள் உழைத்திட அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

5. எங்கள் பங்குத் திருச்சபையில் உள்ள ஏழை, அநாதைகள், நோயுற்றோர், கைவிடப்பட்டோர் ஆகியோர்களுக்கு உமது இரக்கத்தையும், கருணையையும் வெளிப்படுத்தும் அன்புக் கருவிகளாக நாங்கள் வாழ வருமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 10.02.2017 தூய ஸ்கொலாஸ்திக்கா நினைவு திருப்பலி

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

### முன்னுரை

அன்புக்குரிய இறைமக்களே, நமது தாயாம் திருச்சபை இவ்வுலக வாழ்வில் இறைவனோடு இணையில்லா வாழ்க்கை வாழ்ந்தவர்களை நமக்கு முன்னோடிகளாக பிரகடனப்படுத்துகிறது. அவ்வாறு, இன்றைய நாளில் நாம் நினைவு கூறுபவரான தூய கொலாஸ்திக்கா கி.பி. 480ம் ஆண்டு பிறந்தவர். இவர் தூய ஆசீர்வாதப்பரின் தங்கையாவார். தூய ஸ்கொலாஸ்திக்கா வாழ்ந்து வந்த கன்னியர் இல்லத்திற்கும், தூய ஆசீர்வாதப்பர் வாழ்ந்து வந்த துறவிகள் இல்லத்திற்கும் 5மைல் தொலைவு இருந்தது. கடவுளைப்பற்றியும் பரலோகத்தைப் பற்றியுமே இவர்கள் பலமுறை சந்தித்து பேசுவார்கள். ஒருநாள் பேசிக்கொண்டிருக்கும்போது அதிக நேரமாகி விட்டதால் ஆசீர்வாதப்பர் செல்ல முயன்றார். அப்போது தங்கை ஸ்கொலாஸ்திக்கா அங்கேயே தங்கும்படி கேட்டுக் கொண்டார். அவரோ மறுத்ததால் தங்கை கடவுளை மன்றாடினார்.

ஏனென்றால் தன் அண்ணன் ஆசீர்வாதப்பருடன் இதுவே கடைசி சந்திப்பு என்று அவர் உணர்ந்திருந்தார். அவருடைய மன்றாட்டை கடவுள் கேட்டார். இடியுடனும், சூறாவளி காற்றுடனும் மழை பெய்தது. கடவுளைப் பற்றி பேசுவதில் இருவரும் இரவு முழுவதையும் செலவழித்தார்கள். இடிமழை நின்றது, பொழுதும் விடிந்தது, காலையில் ஆசீர்வாதப்பர் தம் துறவிகள் இல்லத்திற்குச் சென்றார். மூன்று நாட்களுக்குப்பின் ஸ்கொலாஸ்திக்கா மரணமடைந்தார். அவருடைய ஆன்மா மாடப்புறா வடிவில் பரலோகத்திற்குச் செல்வதை ஆசீர்வாதப்பர் கண்ணால் கண்டு கடவுளுக்கு நன்றி செலுத்தினார். நாமும் இவ்வுலக வாழ்வில் பற்றுக்கொள்ளாமல், கடவுளைப்பற்றியும், நிரந்தர வாழ்வைப் பற்றியும் மனதில்கொண்டு பக்தியுடன் வாழ வரம்வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவருக்கே பணி செய்வாயாக (லூக் 4:8) என மொழிந்த இறைவா, திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் விசுவாச தளர்ச்சியும், மனச்சோர்வும் ஏற்படும்போது உயிருள்ள இறைவார்த்தை வழியாக எங்களைத் திடப்படுத்தும் ஞானத்தை அவர்களுக்கு அளிக்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.

ஆண்டவரே எங்கள் ஒளி, அவரே எங்கள் மீட்பு என உணர வைத்த இறைவா, பசித்தவர்கள்மீது பரிவு கொண்டு அற்புதமாக உணவு தந்து பசியை நீக்கியதுபோல் இன்று பசியால் வாடும் கோடிக்கணக்கான மக்களின் துயரை துடைக்கவும், வறுமையை நீக்குவதற்கான வழிமுறைகளை நாடும் மக்களும் செயல்படுத்திட வேண்டிய அருள்புரியும்படி உம்மை மன்றாடுகிறோம்.

"ஆண்டவர்மீது நம்பிக்கைக் கொண்டோர் பேறுபெற்றோர்" அன்புத் தந்தையே இறைவா, செவிடரைக் கேட்க வைத்தீர், ஊமையரை பேச வைத்தீர், ஆனால் நாங்களோ எல்லாமிருந்தும் உம் அருள் வார்த்தையை கேட்காமல் உம் நற்செய்தியை அறிவிக்காமல் உமக்கெதிராகப் பாவம் செய்து கொண்டிருக்கிறோம். வாழ்வளிக்க வந்தவர் நீரே என்றறிந்தும், செவிடரைப்போல், குருடரைப்போல், ஊமையைப்போல் வாழ்ந்து கொண்டிருக்கும் குருட்டு வாழ்க்கையிலிருந்து விலகி, இறையரசின் தெய்வீகப் பாதையில் வாழத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 11.02.2017 தூய லூர்தன்னை திருவிழா திருப்பலி

திரு. ஹென்றி ஸ்டீபன்

### முன்னுரை

இன்று திருச்சபை தூய லூர்து அன்னையின் திருவிழாவை கொண்டாடுகிறது. கி.பி. 1858ம் ஆண்டு பிப்ரவரி 11ம் நாள் தென் பிரான்ஸ் நாட்டில் ஒரு மலையடிவாரத்தில் லூர்து என்ற சிற்றூருக்கு அருகில் குன்றுகளுக்கிடையே முதன் முறையாக பெர்னதெத் என்ற 14வயது சிறுமிக்கு விறகு சேகரிக்க சென்ற இடத்தில் கன்னிமரியா காட்சிக் கொடுத்தார். தொடர்ந்து 17முறை காட்சியளித்து "நாமே அமல உற்பவம்" என்று அறிவித்தார்.

காட்சிகளிளெல்லாம் பாவிகளுக்காக மன்றாட பணித்திறார். செபத்துடன் தவமுயற்சிகள் இன்றியமையாதவை என்று நினைவுப்பிடுகின்றார். அங்கு ஆலயம் கட்ட வேண்டுமென்று கேட்டுக்

கொண்டார். அந்த இடத்தில் சுரக்கும் நீருற்றினின்று இன்றுவரை ஓடிவரும் தண்ணீர் இந்நீரில் விசுவாசத்தோடு இறங்குவோர் அதை பருகுவோர் முழுமையாக பலதரப்பட்ட நோய்களிலிருந்து குணம்பெறுகின்றனர். "உலகின் எத்திசையிலிருந்தும் எண்ணற்ற திருப்பயணிகள் அங்கு செல்கின்றனர். ஆயிரக்கணக்கான புதுமைகள் நடைபெறுகின்றன.

திருத்தந்தை 9ம் பத்திநாதர் "தேவ அன்னை அமல உற்பவி பாவமாசு எதுவுமின்றி உற்பவித்தார்" என்று விசுவாச அறிக்கை வெளியிட்டார். இதை நம் அன்னையிடம் ஆகட்டும் என்று உம்மோடு ஒன்றித்து உம் பிள்ளையாக வாழ முயற்சி செய்ய வரம் தர செபிப்போம். புதுமைகளை காண்போம். செபத்தில் நிலைத்திருப்போர் புண்ணியங்களை காண்பர் என்ற அன்னையின் வாக்குறுதிக்கேற்ப எண்ணங்களை நிறைவேற்ற அருள்தர இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

அன்பு தந்தையே, எம் திருச்சபையின் தலைவர்கள் இறைமக்கள்மீது அக்கறைக்கொண்டு திடமான விசுவாசத்திலும், பக்தியிலும் உற்சாகமூட்டி வழிநடத்த அவர்களுக்கு உமது ஞானத்தையும் ஆற்றலையும் தர தூய லூர்து அன்னை வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

கருணையின் தெய்வமே இறைவா, பேராசை பிறர்பொருளை கவரும் தீய நோக்கம், அநீதி, அட்டூழியம் போன்ற தவறான குணங்களையுடைய தீயோரை உமது அருளால் அறிவூட்டி மனமாற்ற வேண்டுமென்று தூய லூர்து அன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

நீதியும், நேர்மையுமான இறைவா, அன்னை மரியாவின் பாடலில் வெளிப்பட்ட பெண் சமத்துவம், பெண்விடுதலை, பெண்ணுரிமை ஆகிய மதிப்பீடுகளில் மனித மாண்பை நோக்கி அன்னை மரியாவின் ஆன்மீக வழியில் புதியதோர் சமூகம் காண வரமருள தூய லூர்து அன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, தமிழகத்தில் வாழும் ஏழை எளிய விவசாயிகளின் ஏக்கங்களையும், மனஉளைச்சல்களையும், கவலை, கண்ணீர் ஆகியவற்றையும் நீக்கி தேவையான நல்ல மழையை பொழிந்து அவர்களுக்கு ஆறுதலையும், மனஉறுதியையும் தந்து தேவையான அனைத்து பொருளாதார உதவிகளும் பெற்று நலமுடன் வாழ தூய லூர்து அன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 12.02.2017 ஆண்டின் பொதுக்காலம் 6ம் ஞாயிறு திருப்பலி

திருமதி. ராணி வில்சன்

**முன்னுரை**

"தன்னைத் தவிர அனைத்தையும் அறிபவன் அறிஞன்
தன்னைத் தானே மிகச் சரியாக அறிபவன் ஞானி"

இந்த இருபெரும் சவால்களை நம்முன் வைக்கிறார் இறைவன். உன் வாழ்க்கை உன் கையில் என்பதுபோல் நாம் எதை தேர்ந்துக்கொள்ளப்போகிறோம். இரண்டுமே தேவைதான் ஆனால் தேர்ந்தெடுப்பது என்பது மிகப் பெரிய கேள்விக்குறி. என் பாரம்பரியம் ஒன்றை சொல்லிக்கொடுக்கிறது. என் அறிவு ஒன்றை அறிவிக்கிறது. கல்வி ஒன்றைக் கற்றுக்கொடுக்கிறது. இச்சமூகம் ஒன்றை வலியுறுத்துகிறது. ஆன்மீகம் நான் உன்னை தெரிவுப்படுத்துகிறேன் என்கிறது. இதில் நான், என் குடும்பம், வேலை, தொழில், பிரச்சனைகள், சவால்கள் ஒட்டுமொத்த உலக நடப்புகள் இவற்றிலிருந்து என்னை எவ்வாறு பிரித்தெடுப்பது. இதைத்தான் இன்றைய வாசகங்களும், நற்செய்தியும் மிகத் தெளிவாக ஆணித்தரமாக நமக்கு அறிவுறுத்துகிறது. மாசற்றவராக, ஒழுங்குமுறைகளை கடைபிடித்து, நீதியோடு, முழு உள்ளத்தோடு, ஞானம் நிறைந்த மெய்யுணர்வோடு வாழ அழைக்கிறது. அறிந்து கொள்வது மட்டும் போதுமா? அவற்றிலிருந்து தேவையானது எதுவோ அதை எடுத்து நாமும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்கப் போகிறோமா, சிந்திப்போம், செயல்படுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

அன்பே இறைவா, இறைப்பணியில் ஈடுபட்டுள்ள எம் ஞான மேய்ப்பர்களை உம் கரத்தில் ஒப்படைக்கிறோம். பல சவால்களுக்கு மத்தியில் பணிபுரியும் அவர்களை உம் நீதி, நியாய முறைகளால் நிரப்பி அதன்படி வாழவும் மக்களை அவ்வழியில் நடத்தி செல்லவும் வேண்டிய அருளைப் பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

ஆறுதலே இறைவா, இன்றைய சூழல் மக்களை மிகவும் துன்புறுத்துகிறது. கருப்புப்பணம், பணமில்லா பரிவர்த்தனை, விலைவாசி ஏற்றம், ஆலைகள், தொழிற்சாலைகள், சிறு குறு தொழில்கள், சிறு வணிகங்கள், வியாபாரத்திற்கான போக்குவரத்து இன்னும் பல பிரச்சனைகளால் அவதிப்பட்டு கொண்டிருக்கிறோம். எங்களை காக்கும் இறைவன் நீர். எந்நேரத்திலும் என்ன உதவி தேவையோ அதை அளித்து ஆறுதல் அளித்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

இரக்கமே உருவான இறைவா, மழை, வெள்ளம், புயல் இவற்றால் தமிழகம் மீண்டும் மீண்டும் தாக்கப்பட்டு மிகுந்த இழப்புகளால் பாதிக்கப்பட்டு நாங்கள் தவிக்கிறோம். உணவு, உடை, இருப்பிடமின்றி, குடிநீரின்றி அவதிப்படுகின்றோம். உமது கருணை, இரக்கம், கிருபையால் எங்களை இத்துயரத்திலிருந்து மீட்டெடுத்து புதுவாழ்வு அருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

அன்பு இறைவா, எங்கள் பாரத தேசத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் மாசற்ற நீதி, நேர்மை, நியாய தர்மங்களை கைக்கொண்டு தானும் வாழ்ந்து மக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதி, சுகாதார வசதி, மருத்துவ வசதி மற்றும் பல நலன்கள் கொடுத்து வாழ வைக்கும் நல்ல உள்ளம் படைத்தவர்களை எங்கள் அரசியல் தலைவர்களாக அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

### 14.02.2017 தூய சிரில் மற்றும் மெத்தோடியுஸ் திருப்பலி

திருமதி. டிலைலா சேவியர்

**முன்னுரை**

இறை இயேசுவில் பிரியமானவர்களே, இன்றைய புனிதர்களான தூய சிரில், மெத்தோடியுஸ் இருவரும் சகோதர்கள் இவர்கள் தெசலோனிக்கா என்ற ஊரில் உயர்ந்த குடும்பத்தில் தோன்றி இளமை முதல் இறைவனுடன் ஒன்றி வாழ்ந்து வந்தனர். சிரில் தமது அறிவுத் திறமையால் எல்லா கலைகளையும் கற்றுத் தேர்ந்து, "வல்லுநர்" என்னும் பட்டத்தைப் பெற்றவர். பிறரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக உழைத்தவர். மெத்தோடியுஸ் துறவற நிலையைத் தெரிந்துக் கொண்டார். இருவரும் மக்களுக்கு மெய்மறையைப் போதித்தனர். பல்கேரிய நாட்டு மன்னன் தன்னுடைய புதிய அரண்மனைக்கு ஓவியக்கலையில் தேர்ந்த மெத்தோடியுசை ஒரு படத்தை வரையும்படி கேட்டுக் கொண்டான். மெத்தோடியுஸ் பொதுத்தீர்வை படத்தை வரைந்து அதன் பொருளையும், அரசனுக்கு விளக்கினார். அரசரும் நடுக்கத்தோடு மெய்மறையைத் தழுவி திருமுழுக்கு பெற்றார். இரு சகோதர்களும் பல நாடுகளுக்குச் சென்று, மிகுந்த ஆர்வத்தோடு இயேசுவைப்பற்றியும் மெய்மறையையும் போதித்தனர். கணக்கில்லாத மக்கள் மனம் திரும்பினர். இதைக் கண்ணுற்ற திருத்தந்தை இவர்களுக்கு ஆயர் பதவியை வழங்கினார். சிரில் உரோமுக்கு திரும்பிவரும் வழியில் நோயினால் இறந்தார். அதற்குப் பின் நீண்ட காலம் திருச்சபைக்காக உழைத்த மெத்தோடியுஸ் பல எதிர்ப்புக்களைத் திருச்சபைக்குள்ளேயே சந்தித்தாலும் அத்தகைய துன்பங்களின் இடையே ஸ்லாவிக் மொழியில் விவிலியம் முழுவதையும் மொழி பெயர்த்தார். இதன் பின்னர் புனித வாரத்தில் இறைவனடி சேர்ந்தார். இவ்விருவரைப் போல் சிரமத்தையும் களைப்பையும் பாராமல் கடவுளின் மகிமைக்காகவும் மக்களின் ஈடேற்றத்திற்காகவும் இறுதிவரை உழைப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

வார்த்தையான தெய்வமே இறைவா, உம் நற்செய்தியை பாரெங்கும் பறைசாற்றவும் உமது பணியை தொடர்ந்தாற்றிடவும் உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் உமது வழிநடத்துதலாலும், பாதுகாப்பிலும் தங்களின் மறைப்பரப்பு பணிகளில் ஏற்படும் எதிர்ப்புகள், பிரச்சனைகள், சோதனைகள் இவற்றிலிருந்து பாதுகாத்து, தங்களின் வாழ்வின் இறுதிவரை உமக்கு சாட்சியாக வாழும் வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

அரவணைக்கும் அன்பு இறைவா, இளைஞர் இளம் பெண்கள் தங்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும், முன்னேற்றங்களையும் அடைய உம்மை தேடவும் சோதனை நேரங்களில் உம்மீது ஆழமான நம்பிக்கை வைக்கவும், தங்களால் இயன்றவரை தங்களின் பங்குத்தளங்களிலே பங்குத் தந்தையோடும், பக்த சபைகளோடும், இணைந்து தங்களுக்கு தரப்படும் தியானம், ஒப்புரவு அருட்சாதனம், ஆராதனை, நவநாட்கள் போன்றவற்றில் தங்களை ஈடுபடுத்த நல்மனதை தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

குணமாக்கும் வல்லவரே இறைவா, உமது பணியினை ஆர்வத்தோடு செய்துவரும் அனைவரையும், குறிப்பாக பல நாடுகளில் இருக்கும் மறைப்பரப்பு பணிகள் செய்யும் திருப்பணியாளர்களை பல்வேறு

நோய்களிலிருந்து பாதுகாத்து இவர்களுக்கு நல்ல ஆரோக்கியமான உடல்சுகமும், மனதில் உற்சாகமும், பாதுகாப்பும் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**19.02.2017 ஆண்டின் பொதுக்காலம் 7ம் ஞாயிறு** **திருப்பலி**

திருமதி. ராணி சம்பந்தன்

**முன்னுரை**

இறை இயேசுவில் வாழும் இனிய மக்களே, இயேசு பழிவாங்கும் செயலை கண்டித்து, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து அன்பு செய்வதை அருமையாக எடுத்துரைக்கிறார். இக்கால கட்டத்தில் நம்மீது அன்பு செலுத்துபவருக்கு பதில் அன்பு செலுத்தும் பக்குவம் மட்டுமில்லாமல், நம் பகைவருக்கும் எவ்வித பலனையும் எதிர் நோக்காமல் உண்மையான அன்பு செலுத்த கடமைப்பட்டவர்களாக உள்ளோம். விண்ணகத் தந்தை மனிதனை தனது உருவிலும், சாயலிலும் படைத்தார் என்பது தந்தையிடம் உள்ள இறைத்தன்மை நம்மிடமும் உள்ளது என்பதைப் புலப்படுத்துகிறது. இல்லாதவரோடு பகிர்ந்து வாழவும், தீமைகளுக்கு பதில் நன்மை செய்யவும் கடவுளின் இரக்கம் அனைவரையும் அவரணைப்பதுபோல நாமும் கடவுளின் மக்களாக இருக்கிறோம் என்ற உணர்வோடு கிறிஸ்தவ மக்களுக்குரிய இறைவனின் குணங்களோடு அனைவரையும் அரவணைத்து அன்பு செய்வோம் என்ற உறுதியோடு இத்திருப்பலியில் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

அனைத்தையும் படைத்த இறைவா, உம்மால் உருவாக்கப்பட்ட திருச்சபையின் தலையான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் "அன்பு" என்னும் சொல்லின் பரிணாமத்தை நன்குணர்ந்தவர்களாய் ஒருவருக்கொருவர் தீமை, பொறாமை, தற்பெருமை, அளவில்லா கோபம் இவைகளை விலக்கி இறைசாட்சிகளாக வாழ உம்மை மன்றாடுகிறோம்.

உன்னதரே எம் இறைவா, வளர்ந்து வரும் இச்சமூகத்தில் பகைவரிடமும் அன்பு என்ற பொன்மொழி மறைந்து வரும் இக்காலக்கட்டத்தில் எங்கள் சமுதாயம் அன்பில்லா சமுதாயமாக மாறாமல் அன்புணர்வோடு எங்கள் பகைவர்களை அன்பு செய்து அரவணைக்க வேண்டிய ஆற்றலையும் நல்லுள்ளத்தையும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

பாதுகாவலரே இறைவா, நமது இந்திய திருநாட்டின் அனைத்து அரசுகளும் ஒன்றுக்கொன்று போட்டியிடாமல் தேசநலனைக் கருத்தில் கொண்டு மக்கள் நலனை மனதில் இருத்தி விளைச்சல் பெருக தேவையான தண்ணீர் கிடைக்க, பயிர்கள் நன்கு விளைய தேவையான தண்ணீர் வசதியினை நீர் நல்கிடுவீர் என்ற நம்பிக்கையில் உம்மை மன்றாடுகிறோம்.

இரக்கத்தின் இறைவா, இயற்கையின் சீற்றத்தால் "புயல்" என்னும் அரக்கனின் கரம்பட்டு சிதைந்து போன மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யவும், வறுமை, வீடில்லாமை என்ற இடர்பாடுகளை நீக்க நீர்தாமே தேவையறிந்து உதவும் கரங்களை அனுப்ப வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**21.02.2017 தூய பீட்டர் தமியான்** **திருப்பலி**

திரு. இம்மானுவேல் ஜெயராஜ்

**முன்னுரை**

தூய பீட்டர் தமியான் 1007ஆம் ஆண்டு இத்தாலி தேசத்தின் ராவேண்ணா என்ற ஊரில் ஒரு பெரிய குடும்பத்தில் பிறந்தார். அவருடைய இளமை பருவத்திலேயே தாயையும், தந்தையையும் இழந்தார். அவருடைய மூத்த சகோதரர் அவரை கொடுமைப்படுத்துவதைக் கண்ட அவருடைய குருவானவராகவுள்ள மற்றொரு சகோதரர் தமியானை படிக்க வைத்தார். அக்குருவானவரின் தமியான் என்ற பெயரை தன்னுடைய துணை பெயராக இணைத்து பீட்டர் தமியான் என்று அழைக்கப்பட்டார். தன் அண்ணனைப்போல் இவரும் குருவாகி புனித பெனடிக்ட் என்ற ஆசீர்வாதப்பரின் சபையில் இணைந்து ஏழ்மையைப் போக்கும் பணியில் தன்னை அர்ப்பணித்தார். போதனை செய்வதில் சிறந்து விளங்கினார். அவர் தன் தலைமையில் வேறு ஐந்து துறவற சபைகளை உருவாக்கினார்.

1059ல் திருத்தந்தை 9ம் ஸ்டீபன், பீட்டர் தமியான் அவர்களை ஆயராக திருநிலைப்படுத்தினார். அவருடைய தலைமையில் துறவற சபையினர் தங்களை திருச்சபையின் மதிப்பீடுகளின்படி அதில்

நீடிக்கவும் அதன் வளர்ச்சிக்கான பணிகளில் தங்களை அர்ப்பணிக்கவும் வழிவகை செய்தார். 1067ல் பீட்டர் தமியான் தன்னை குருமார்களின் நிலையிலிருந்து விடுவித்துக் கொண்டு போண்டே அவலேனாவிலுள்ள துறவிகள் மடத்திற்கு திரும்பினார். 1072ம் ஆண்டு உடல்நிலை பாதிக்கப்பட்டு அத்துறவிகள் மடத்தில் பிப்ரவரி மாதத்தில் உயிர் நீத்தார். 1823ல் திருத்தந்தை 12ம் லியோ அவர்கள் புனித பீட்டர் தமியான் அவர்களை திருச்சபையின் மருத்துவர் என்று பெயரிட்டு அவருடைய புனித நாளை மேற்கத்திய அனைத்து தேவாலயங்களிலும் சிறப்பாக கொண்டாட செய்தார்.

**22.02.2017 தூய பேதுருவின் தலைமைப்பீடம் திருப்பலி**

திரு. ஜான் சுரேஷ்

**முன்னுரை**

இறை இயேசுவில் பிரியமானவர்களே, இன்று நம் தாய் திருச்சபையானது தூய பேதுருவின் தலைமைப் பீடம் நினைவு திருவிழாவைக் கொண்டாட அழைப்பு விடுக்கிறது. இயேசு விவிலியத்தில் பேதுருவை பார்த்து, "உன் பெயர் பேதுரு, இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றிக் கொள்ளா, விண்ணரசின் திறவுகோலை நான் உன்னிடம் தருவேன், மண்ணுலகில் நீ தடை செய்வது எதவும் விண்ணுலகிலும் தடைச்செய்யப்படும், மண்ணுலகில் நீ அனுமதிப்பது எதுவும் விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்" என்று பேதுருவிடம் கூறிய இயேசு தமக்கு பிறகு தமது இடத்தில் பேதுருவைப் பணியாளராக அமர்த்தி உலகம் முழுமைக்குமான அதிகாரத்தை கொடுத்தார். இயேசு தாம் செய்த அனைத்துவிதமான நற்செய்தியின் பரிமாணத்தையும் பேதுரு வழியாக மீண்டும் செயல்படுத்தினார். இதனை நினைவு கூறும் திருத்தூதர்கள் மீது கட்டப்பட்ட திருச்சபையானது ஒற்றுமையின் அடையாளத்தை கொண்டாடவும் 4ம் நூற்றாண்டில் இந்த விழா ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரைக் கொண்டாடப்படுகிறது. எனவே பேதுருவைப்போல தலைமை ஏற்று பணிசெய்யும் ஆற்றலையும், அருளையும் வேண்டி இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

புனித பேதுருவின் வழிநடக்கும் திருத்தந்தை, ஆயர்கள் அனைவரும் நல்ல மேய்ப்பர்களாக தன்னலம் துறந்து தூய உள்ளத்துடன் பணிபுரிந்து இறைவனின் அரசாட்சியை உலகில் வளர்த்திட வேண்டிய அனைத்து வரங்களையும் நீரே இவர்களுக்கு பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

விண்ணரசின் திறவுகோலைப் பெற்றுள்ள பேதுருவின் தூய பீடத்தின் திருநாளான இன்நன்னாளில் நாம் நம் பாவ வாழ்விலிருந்து விடுபடவும், மரித்த நம் உற்றார், உறவினர் பாவங்கள் மன்னிக்கப்பட்டு அனைவரும் விண்ணகத்தில் புனிதர்களோடு இணைந்து இறைவனை முழுமையாக தரிசிக்கும் பாக்கியம் பெற இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

அரியணையில் வீற்றிருக்கும் எம் இறைவா, நாட்டு தலைவர்களை உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் தன்னலம் துறந்து பொதுநலத்தை ஆடையாக அணிந்து புனித பேதுருவைப்போல தலைமைப்பீடத்தை வழிநடத்த வேண்டிய அருளைத் தருமாறு புனித பேதுரு வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

குடும்பங்களுக்கு அரசரான இறைவா, எங்கள் குடும்பம் மட்டுமல்ல அனைத்து குடும்பங்களும் உமது அரசாட்சியை கண்டுணர்ந்து அமைதியோடும், சமாதானத்தோடும் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**23-02-2017 தூய போலிக்கார்ப் விழா திருப்பலி**

திரு. ஜான் அலெக்சாண்டர்

முன்னுரை

அன்புக்குரியவர்களே, இன்று திருஅவையானது இரண்டாம் தலைமுறைத் தலைவர்கள் குழாமைச் சார்ந்த தூய போலிக்கார்ப் அவர்களின் விழாவை கொண்டாடுகிறது. இவர் நற்செய்தியாளர் யோவானின் சீடராவார். ஸ்மிர்னா நகர ஆயராக இருந்தவர். 156ம் ஆண்டு பிப்ரவரி 23ம் நாள் இப்புனிதரை படுகொலை செய்தனர். மக்கள் உடலைக் கொண்டுபோய் வணங்கி இன்னும் அதிகமாக கிளர்ந்தெழுவார்கள் என்று கருதிய அரசன் உடலைக் கொடுக்காமல் தீயிட்டு எரிக்க ஆணையிட்டான். இப்புனிதரின் மறைசாட்சியத்தை நினைவுப்படுத்தவும், கிறிஸ்துவ நம்பிக்கைக்காக மறைசாட்சிகளை

தயார்ப்படுத்தவும் இவரது எலும்புகளை மக்கள் எடுத்துச்சென்றார்களாம். இன்றைய நற்செய்தியில் இயேசு கூறுகிறார் பலிப்பொருள் உப்பால் தூய்மையாக்கப்படுவதுபோல் ஒவ்வொருவரும் நெருப்பால் தூய்மையாக்கப்படுவர் (மாற்கு 9:49). இங்கே நெருப்பு என்ற வார்த்தைக்கு தூய ஆவியை நாம் ஒப்பிடலாம். தூய ஆவியானவர் நம்மை இறைவனுக்கு ஏற்ற பலிப்பொருளாக மாற்ற உதவிசெய்வார். தினமும் ஒரு புனிதரை திருச்சபை நினைவில்கொண்டு சிறப்பாக செபிக்கிறது. இப்புனிதர்கள் தங்களையே தூய ஆவியிடம் கையளித்து இறைவனுக்கு ஏற்ற பலியாய் மாறினார்கள் நாமும் இறைவனுக்கு ஏற்ற பலிப்பொருளாய் மாற தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகள் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும் சோர்வுற்றோருக்கு பலமாகவும், வழிதவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்தை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. உமது வார்த்தையை உலகுக்கு எடுத்துரைக்க இறைவாக்கினரை ஏற்படுத்துகின்ற இறைவா, உம் வாக்கை அன்புடனும் தாழ்ச்சியுடனும் கேட்டுக் கீழ்படியும் மக்களாக நாங்கள் வாழ இறைவா உம்மை மன்றாடுகிறோம்
3. மனிதரால் புறக்கணிக்கப்பட்ட இயேசுவே உம்மை அறியாத மக்களால் நாங்கள் புறக்கணிக்கப்படும் போது அவர்களை வெறுக்காமல் அவர்களுக்காக மன்றாடும் மனதை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்
4. அனைத்திலும் சிறந்தது அன்பே என்பதை அறியும் நாங்கள் உண்மையான அன்பின் மக்களாக வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்
5. ஏழை, எளிய, ஆதரவற்ற, கைவிடப்பட்டோர், இன்னலுறுவோருக்கு உமது அன்பை அளிக்கும் தாராள மனதை எங்களுக்கு தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**26.02.2017 ஆண்டின் பொதுக்காலம் 8ம் ஞாயிறு** **திருப்பலி**

திரு. D.V.R. ராஜா

**முன்னுரை**

இன்று ஆண்டின் பொதுக்காலம் 8ம் ஞாயிறு சிறப்பிக்கும் நம் உள்ளத்திலும் இல்லத்திலும் இறையாட்சித் தங்கிடச் செய்வோம். கபடற்ற உள்ளத்தோடு குறைகளைக் காணாது யாரையும் தீர்ப்பிடாமல் இருப்போம். தீர்ப்பிடத் தகுதியுள்ளவர் அவரே. அதற்குரிய நாள்வரும்போது அவரே தீர்ப்பிடுவார் மறைவானதையும் வெளிப்படுத்துவார். தாய் மறந்தாலும் நான் உன்னை மறவேன் என்ற தன் அரவணைப்பை ஆண்டவர் உணர்த்துகிறார். இதையே இன்றைய இரு வாசகங்களும் நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. எதற்கும் கவலைப்பட வேண்டாம் என்று தம் உடனிருப்பை ஆண்டவர் நற்செய்தி வாயிலாக வெளிப்படுத்துகிறார். உணவோ, உடையோ, இருப்பிடமோ, வறுமையோ, நோயோ, சஞ்சலமோ, சங்கடமோ, தாழ்வோ, உயர்வோ இவை எதுவுமே நம்மை அவரிடமிருந்து பிரிக்க முடியாது. ஆனால் உயிருள்ளக் கடவுள் நம்மோடு உள்ளார் என்ற ஆழ்ந்த விசுவாசம் நம்மிடம் இருக்க வேண்டும்.

அதனால்தான் நாம் எதை உண்போம், குடிப்போம், உடுத்துவோம் என்பதைக் குறித்து கவலை தேவையில்லை என்கிறார். இன்றைய முதல் வாசகத்தில் தாய் மறந்தாலும் நான் மறவேன் என்று உறுதியளிக்கிறார். நாம் கவலைக் கொள்வதால் பலன் இல்லை மாறாக நாளைய தினம் குறித்து கவலைக் கொள்ளாமல் அன்றைய நாளுக்குரிய கவலைபோதும். வயல்வெளி மலர்களுக்கும், காட்டுப்பூவுக்கும் பேரெழிலை ஒரு நாளில் உதிர்பவைக்குத் தரும்போது தன் சாயலாய் நம்மைப் படைத்த தேவன் நம்மை நிச்சயம் நினைவு கூறுவார் என்ற விசுவாசத்தோடு இத்திருப்பலியில் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

**திருச்சபைக்காக:** அன்பான தேவா, திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தைக்கு ஆன்ம சரீர நலன்கள் குறைவுபடாமல் தொடர்ந்து பாதுகாத்து அவர் எடுக்கும் ஒவ்வொரு நன்முயற்சியும் வெற்றியாய் அமைந்து, இறை சமூகத்திற்கு தொண்டாற்றவும், உலகில் போர் பூசல்கள் நீங்கி உலக மக்களை ஒன்றிணைக்கும் பாலமாக விளங்கிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**பங்கு மக்களுக்காக:** இரக்கமுள்ள இறைவா, எமது பங்கு மக்கள் அனைவரும் ஆன்மீக வாழ்வில் முதிர்ச்சி பெற்று விசுவாச வாழ்வில் வளரவும், தாங்கள் செய்யும் பணியில், தொழிலில் நல்ல முன்னேற்றமும், வளர்ச்சியும் அளித்து, வாழ்வில் முன்னேறவும் வறுமை, பிணி, நோய் இவைகளை நீக்கி, தேவையினை நிறைவேற்றவும், குடும்பத்தினரையும், பிள்ளைகளையும் பாதுகாத்து ஆசீர்வதிக்க உம்மை மன்றாடுகிறோம்.

**இளையோருக்காக:** கருணையுள்ள தேவா, இளைஞர்கள் யாவரும் இறைநம்பிக்கையில் உறுதியாய் நிலைத்து நின்று கல்வியிலும், இறை ஞானத்திலும் சிறந்து விளங்கி நல்ல வேலை வாய்ப்புகள், தொழில் வாய்ப்புகள், கிடைக்கப்பெறவும், நல்ல வாழ்க்கைத் துணை அமையவும், பங்கு தளத்தின் நிகழ்வுகளில் தங்கள் பங்களிப்பைத் தொடர்ந்து நல்கி இறைவனின் ஆசியையும் அருளையும் பெற்றிட உம்மை மன்றாடுகிறோம்.

**நாட்டுத் தலைவர்களுக்காக:** நீதியுள்ள இறைவா, எமது நாட்டுத் தலைவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை மறவாமல் தங்கள் சொந்தக் கருத்துக்களையும் திட்டங்களையும் செயல்படுத்துவதில் அதிகம் ஆர்வம் காட்டாமல் மக்களின் சூழ்நிலைகளுக்கேற்ப தேவைகளை கவனத்தில் கொண்டு செயல்படவும் மக்களுக்கு விரோதமான காரியங்களை மக்கள்மேல் திணிக்கலாம் என்று எண்ணாமல், தங்களுக்குள்ள உடைமைகளே போதும் என்ற மனதை இறைவன் தாமே இவர்களுக்குத் தந்து பசியினாலும், வறுமையினாலும் உயிரிழக்கும் விவசாயிகள், மீனவர்கள், அடித்தட்டு மக்களை நினைவில் கொண்டு அவர்களை பொருளாதாரத்தில் உயர்த்தவும் இயற்கை வளங்கள் அழியாமல் பாதுகாக்கவும் ஆட்சியாளர்களுக்கு நல்மனதை அளித்திட உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: விசவாசத்தில் வளர...

## துறவற அர்ப்பண வாழ்வு - சிறு விளக்கம்

ஜே. ஞானப்பிரகாசம் அவர்களின் "மனதில் நிறுத்தி மாற்றம் பெற" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

### 1. அர்ப்பண வாழ்வின் 5 படிகள் என்பது யாவை?

1. எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இறைவனிடம் வேண்டுதல் செய்வதோடு எல்லாவற்றிற்கும் நன்றி கூறுவது
2. நாம் எல்லாவற்றிற்கும் நன்மை காண்பது
3. இதனால் நம் சுபாவத்தை மாற்றவும் அனுசரித்து வாழவும் முடியும்
4. இதனால் நம் பாவங்களை ஏற்றுக்கொள்ள முடியும்
5. மேலும் நாம் அர்ப்பணித்து வாழவும் முடியும்.

### 2. அர்ப்பணம் என்றால் என்ன?

நம் முழு உள்ளத்தோடும், முழு இதயத்தோடும் முழு ஆற்றலோடும் என்றென்றும் கடவுளுக்கு நம்மை ஒப்புக்கொடுப்பது

### 3. துறவு என்றால் என்ன?

கடவுளை நம் மணவாளனாக வாழ்க்கை துணையாக ஏற்றுக்கொள்வது

### 4. துறவு வாழ்வில் நாம் என்ன செய்கிறோம்

நாம் கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்ள இவ்வுலக மேன்மை அனைத்தையும் குப்பையாக கருதுகிறோம்.

### 5. துறவறம் குறித்து விவிலிய வார்த்தைகள் என்ன சொல்கிறது.

1. உடை மாற்றம்(திவெ. 7:14)
2. ஆடையை ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் துவைப்பது (திவெ.7:14, 16:15)
3. இயேசுவின் வருகையின்போது நம் முகத்தோற்றமும், ஆடையும் தூய்மையாயிருப்பது (லூக் 9:29)
4. எலியா எலிசேயுவை தம் மேலாடையைப்போர்த்தி கடவுளின் பணிக்கு அழைத்ததைப்போல் இயேசுவின் வருகையின்போது அவரை எதிர்கொண்டு செல்ல ஆடை அணிந்தவர்களாக நிற்க வேண்டும் (2அர2:13-14).
5. இயேசு பிதாவின் சாயலாக மாறியதால் தான் கடவுளின் மேன்மை அவருக்குள் இருந்தது. அது போன்றே ஆன்மாவில் நாம் வளர்வோம்.

**6. ஆன்ம ஈடேற்றம் என்றால் என்ன?**

மக்களை மீட்புக்கும், ஆவியால் ஆட்கொள்ளப்படுவதற்கும், அர்ப்பணத்திற்கும் பயிற்சியளிப்பது. மக்களுக்கு இயேசுவை அறியச் செய்து, பெருஞ்சுமை சுமந்தவர்களை இயேசுவிடம் கொண்டு செல்வது (மத்.11:28) குறிப்பாக துன்பம், கஷ்டம், வறுமை, வருத்தம், வியாதிகளில் இருப்பவர்களை அழைத்து செல்வது, இயேசுதான் வழி, உண்மை, உயிர் என்ற சாட்சிகளாய் இருப்பது (எசா. 43:10).

**7. ஆன்ம ஈடேற்றத்திற்கு தூய ஆவியார் தரும் கொடைகள் யாவை?**

**ஆவியின் கொடைகள்:** செயல்பாடுகள் பலவகையுண்டு, ஆனால் கடவுள் ஒருவரே. அவரே எல்லாரிடமும் எல்லாவற்றையும் செயல்படுத்துபவர். பொது நன்மைக்காகவே தூய ஆவியாரின் செயல்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகிறது. தூய ஆவியார் ஒருவருக்கு ஞானம் நிறைந்த சொல்வளத்தை அருளுகிறார். இன்னொருவருக்கோ அதே ஆவியார் அறிவுசெறிந்த சொல்வளத்தை அளிக்கிறார். அதே ஆவியார் வேறொருவருக்கு நம்பிக்கை அருளுகிறார். ஆந்த ஒரே ஆவியார் மற்றொருவருக்குப் பிணிதீர்க்கும் அருள் கொடையையும் அளிக்கிறார். தூய ஆவியார் ஒருவருக்கு வல்ல செயல் செய்யும் ஆற்றலையும் இன்னொருவருக்கு இறைவாக்குரைக்கும் ஆற்றலையும் வேறொருவருக்கு ஆவிக்குரியவற்றைப் பகுத்தறியும் ஆற்றலையும் மற்றொருவருக்குப் பல்வகை பரவசப் பேச்சு பேசும் ஆற்றலையும் பிரிதொருவருக்கு அப்பேச்சை விளக்கும் ஆற்றலையும் அருளுகிறார். அந்த ஒரே ஆவியாரே இவற்றையெல்லாம் செயல்படுத்துகிறார். அவரே தம் விருப்பம்போல் ஒவ்வொருவருக்கும் இவற்றைப் பகிர்ந்தளிக்கிறார் (1கொரி.12:6-11).

**ஆவியின் கனிகள்:** தூய ஆவியின் கனியோ அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் (கலா. 5:22).

## துறவற வாழ்வின் மேன்மைகள்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

தீமையானதை மனதார தள்ளி வைப்பது வெறுத்தல். நன்மையானதை மேலான நன்மைக்காக தற்காலிகமாக தியாகம் செய்தல் ஒறுத்தல். நன்மையானதை மேலான நன்மைக்காக நிரந்தரமாகத் தியாகம் செய்வது துறத்தல். துறத்தல்-துறவறம். ஆம், காட்டுக்குச் செல்வது, காசிக்குச் செல்வது, மத அடிப்படைவாதத்தை மக்களிடையே வளர்ப்பது இவையெல்லாம் இந்தியத் துறவறத்தாரின் சாராம்சம். அதே நேரத்தில் மக்கள் விடுதலைப் பணியில் துறவியின் அர்த்ததைக் கண்டவரும் உண்டு. திருச்சபையிலும் துறவிகள் ஒரே குடும்பமாக வாழ்ந்து கிறிஸ்துவின் மதிப்பீடுகளோடு சாட்சி பகர்ந்து, புதியதோர் உலகம் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலும், இறைவன் திருச்சபைக்கு அளித்திருக்கும் மிகப்பெரிய கொடை துறவற வாழ்வு.

இந்த துறவிகள் யார்? இவர்கள் நற்செய்தியை வேரோட்டமாக வாழ வந்தவர்கள். இறைமகன் வாழ்வில் தென்பட்ட கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல் என்ற நற்செய்திப் போதனைகளை விருப்புடன் தானே ஏற்றுக் கொண்டவர்கள். இயேசு கண்ட கனவாம் இறையாட்சியை மண்ணில் மலர தமது பணிகளின் மூலம் உழைப்பவர்கள். இறைவன் தரும் சிறப்பு அருளும், அழைப்பும் இல்லையெனில், எவரும் துறவறத்தை அணிந்துகொள்ளவோ, இவ்வாழ்வைத் தொடர்ந்து நேர்ந்துக் கொள்ளவோ முடியாது.

துறவற வாழ்வு ஒரு அழைப்பு. இந்த சாட்சிய வாழ்விற்கு ஒரு சில சாதியினரோ, ஒருசில மொழியினரோ, ஒருசில மாநிலத்தவரோ என ஒருபோதும் அழைக்கப்படுவதில்லை. துறவற சபையில் பல மொழியினர், பல ஜாதியினர் வேறுபாடுகளைக் களைந்து கிறிஸ்துவின் மதிப்பீடுகளுக்காக வாழ்கிறார்கள், நற்செய்தியாய் மாறுகிறார்கள். ஒவ்வொரு துறவறச் சபையும் ஒரு குட்டித்திருச்சபை. இந்த இறைச் சமூகங்கள் திருச்சபையோடு இணைந்து திருப்பணியாற்றி, நிறைவாழ்வை நோக்கி, வீரநடைப் போடுகிறது. திருவருட்சாதனமாம் ஞானஸ்நானத்தில் தந்தையே என அழைக்கும் அரிய பேற்றினைப் பெருகிறோம். நம்மில் பிளவுகளால் இறைவனைத் தந்தையென ஏற்றிட தயங்கும் போதெல்லாம் இவ்வுலகில் நாம் இறைத்தந்தையின் மக்களாக வாழ முடியும் என மனிதர்களுக்கு காட்டுபவர்கள் இத்துறவிகளே.

வரலாற்று உண்மையும் இறையியல் உண்மையுமான துறவு, இறைவன் தந்த உலகின் மீது பற்றுக்கொள்ளாமல், உலகப்பொருட்கள்மீது மனதைப் பறிகொடுத்துவிடாமல், இறைவனையே சார்ந்து வாழும்வாழ்க்கையாகும். முழு மனிதனாக வாழ வளர வழிவகுக்கும் துறவு, கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் இல்லற வாழ்வினையும், அதன் இன்ப துன்பங்களையும், தியாகம் செய்து விடுவதில் மட்டும் நிறைவு பெற்றுவிடவில்லை. கிறிஸ்துவைப் போன்று வாழவேண்டும் எனத் துணிந்து, கிறிஸ்தவ வாழ்வை, அவரது நற்செய்தி அறிவுரைகளை வாழ்வின் அடிப்படையாகக் கொண்டு வாழும் வாழ்வே துறவு.

துறவற வாழ்விற்கு எடுத்துக்காட்டாய் திகழ்ந்தவர் இயேசு. கிறிஸ்துவே மனுவுரு எடுத்த இறைவன், இவ்வுலகில் உள்ள எப்பொருள்மீதும் பற்று கொள்ளாமல் தந்தையாம் இறைவனையே அன்பு செய்து அவரைப்போலத் தன்னை எல்லோருக்குமாக கருதினார். இறையன்பால் அனைத்து மக்களையும், குறிப்பாக சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்கள், கைவிடப்பட்டவர்கள், ஏழைகள், பாவிகளையே அன்பு செய்து தன் வாழ்வையே நற்செய்தியாக அமைத்துக் கொண்டார். தான் வாழ்ந்த காலத்து மக்களுக்கு மட்டுமல்ல, யூத இனத்துக்கு மட்டுமல்ல, பின்வருகின்ற தலைமுறையினருக்கும் உலக மக்கள் அனைவருக்கும் இறையரசின் மதிப்பீடுகளை அளித்து துறவியாகவே வாழ்ந்தார் இறைமகன் இயேசு.

**துறவற வாழ்வின் மேன்மை**

கிறிஸ்துவே வாழ்ந்து காட்டிய கற்பு நெறி, இறைமகனாக இருந்தும் தம்மையே வெறுமையாக்கி மனிதத் தன்மைப்பூண்டு வாழ்ந்த கிறிஸ்துவின் ஏழ்மைநிலை, மரணம் மட்டும் தந்தையின் திருவுளத்திற்கு அமைந்து வாழ்ந்த அவரது கீழ்ப்படிதல், துறவிகள் அனைவரையும் மணத்துறவுப்பூண்டு எளிமையான வாழ்வின்மூலமும், கீழ்ப்படிதலின் மூலமும், இறையரசின் சாட்சிகளாகத் திகழ மனத்திடன் அளிக்கின்றன. தங்களின் அர்ப்பணிப்பு வழியாக, முழு வாழ்வையும் அர்ப்பணித்து வாழும் இத்துறவிகள், விண்ணக மறுவாழ்வின் நிறைவை மண்ணகத்தில் பிரதிபலிப்பவர்களாக வாழ்கின்றனர். நற்செய்தி அறிவுரைகளை மேற்கொண்டு கடைபிடிப்பதன்மூலம், துறவிகள் கிறிஸ்துவைத் தங்கள் வாழ்வின் முழு பொருளாக்குவதுடன், மனுவுரு எடுத்த வார்த்தையான கடவுளின் உருவாகவே தங்களை மாற்றிக்கொண்டு வாழ முற்படுகிறார்கள். கற்பு என்ற நற்செய்தி அறிவுரையை ஏற்று வாழ்வதன் வழியாக, கிறிஸ்துவின் புனிதமான அன்பினைத் தனதுடைமையாக்கி வாழ்வதுடன் அவரே ஒரே பேரான கடவுளின் திருமகன் என்பதை உலகிற்கு அறிக்கையிடுகின்றனர் (யோவா 10:30, 14:11)

கிறிஸ்துவின் "ஏழ்மை" என்னும் வார்த்தைப்பாட்டை மேற்கொண்டு வாழ்வதன் வழியாக கடவுளின் மகனான கிறிஸ்து. தந்தையிடமிருந்து அனைத்தையும் பெறுகிறார். தந்தையிடமே அனைத்தையும் அன்பில் அர்ப்பணிக்கிறார் (யோவா 17:7) என்றே உலகிற்கு அறிக்கையிடுகின்றனர். அதுபோல தங்களது முழுமனச்சுந்திரத்தை எக்காலமும் தந்தையின் சித்தத்தை நிறைவேற்றுவதில் முழு மகிழ்வை அடையும். அன்புக்குரிய அன்பான இறைமகனாக இருக்கிறார் என்பதை உலகிற்கு அறிக்கையிடுகின்றனர் (யோவா 9:34). ஏனெனில் இறைமகன் இயேசு தந்தையான கடவுளிடமிருந்து அனைத்தையும் பெறுகிறவராகவும் முற்றிலும் அவரையே சார்ந்துள்ளவராகவும் உள்ளார் என்பதை உணர்கின்றோம்.

இவ்விதமாய் நற்செய்தி அறிவுரைகளான கற்பு, ஏழ்மை மற்றும் கீழ்ப்படிதல் என்னும் வார்த்தைப்பாடுகளை வாழ்வதன்மூலம் கிறிஸ்துவின் மறையுண்மைகளுடன் தங்களை ஒன்றிணைத்து கிறிஸ்துவ வாழ்வுக்கான அடையாளங்களாக துறவிகள் மாறுகின்றனர். தூய ஆவியானவரின் மனிதர்களுக்கான அன்புநிறை அக்கறைக்கான சாட்சியாக மாறுகிறார். இத்தகு சிறப்புநிறை மேன்மையான துறவறவாழ்வு மலர் படுக்கையல்ல, கல்லும் முள்ளும் நிறைந்த கரடுமுரடான ஒன்று. இன்று துறவறம் பல நெருக்கடிகளின் மத்தியில் பயணித்துக்கொண்டிருக்கிறது. இந்நெறுக்கடியிலும்

திருச்சபையின் அழகுமிகு ஆபரணமும், கூர்மையான ஆயுதமும் துறவற சபைகளே. துறவறத்தால் மனித சமூகம் அடைந்த நலன்கள் கணக்கில் அடங்காதவை. இதற்காக அவர்களை உலகம் நன்றியோடு நினைவு கூர்ந்து அவர்களைக் கரம் குவித்து வணங்கி பாராட்டுகிறது. உலகளாவிய அன்பு இவைகளை உயர் நிலையில் வைத்து போற்றுகிறது, ஆயின் துறவு-இறைவாழ்வின் நிறைவு.

## திருச்சபை வரலாற்றில் துறவறத்தாரின் பெரும் பங்கு

திரு. விக்டர்

"உலகை எழுப்பி விடுங்கள்" என்று நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் துறவற ஆண்டிலே துறவற சபையினரைக் கேட்டுக்கொண்டார். திருச்சபையின் பொதுவான செயல்பாடுகளால் இது முடியாது என்பதனாலேயே திருத்தந்தை அவர்கள் துறவிகளை துணைக்கு அழைத்துள்ளார்.

துறவிகள் ஏன் உருவானார்கள்? எப்படி உருவானார்கள்? கிறிஸ்தவர்களில் ஒரு சிலருக்கிருந்த ஆன்மீக ஆர்வம், ஆண்டவருக்கு எதையாகிலும் செய்ய வேண்டுமென்ற தாகம், ஆண்டவருக்கு நெருக்க மானவர்களாக வாழ வேண்டுமென்ற விருப்பம் இவையே அவர்களை துறவிகளாக வாழத் தூண்டியது. குடும்ப வாழ்வில் ஈடுபட்டால் இவைகளையெல்லாம் செயல்படுத்துவது கடினம் என்பதனாலேயே அவர்கள் துறவிகளாக தனித்து செயல்பட்டனர். தங்களது கருத்துக்களுக்கும் செயல்பாடுகளுக்கும் இணக்கமாக இருந்த ஒருசிலரை தங்களோடு இணைத்துக்கொண்டு ஒரு குழுவாக செயல்பட்டனர். பின்னர் இதுவே சபையாக மாற்றம் பெற்றது. துறவற சபைகள் ஒரு குறிப்பிட்ட நோக்கங்களுடன் செயல்பட்டதனால் அவர்கள் திட்டமிட்ட காரியங்களை வெற்றியுடன் நிறைவேற்றி முடிக்க முடிந்தது. இப்படி செயல்பட்ட இந்த துறவிகளின் சபைகள் பொதுவான மக்களின் ஆன்மீகத் தேவைகளையும், சமுதாய சீர்த்திருத்த செயல்களையும் செம்மையாகச் செய்ய முடிந்தது. இப்படி இவர்கள் செய்த செயல்கள் திருச்சபையின் வளர்ச்சியில் பெரும் பங்கு ஆற்றியது என்றால் அது மிகையாகாது.

வேதபோதக பணிகளை பெரிதும் ஆற்றியது இப்படிப்பட்ட துறவற சபைகளேயாகும். நமது இந்தியா, இலங்கை போன்ற கீழைநாடுகளில் வேதபோதகர் பணியை சிறப்பாக நிறைவேற்றி கிறிஸ்தவத்தின் நம்பிக்கைகளை வளரச் செய்தவர்களில் பெரும்பாலோர் துறவற சபைகளைச் சார்ந்தவரே. புனித பிரான்சிஸ் சவேரியார், புனித அருளானந்தர், வீரமாமுனிவர் போன்ற பலரும் துறவற சபைகளைச் சார்ந்தவர்களே. ஒருசில துறவற சபைகளின் துவக்கத்தையும், அவர்களின் நோக்கங்களையும் அறிந்தோமென்றால் அவர்கள் எப்படி திருச்சபைக்கும் அதனுடைய வளர்ச்சிக்கும் பெரும்பங்காற்றினர் என்பதை அறிய முடியும். உதாரணத்திற்கு புனித பிரான்சிஸ் அசிசியார் துவங்கிய பிரான்சிஸ்கன் சபையை எடுத்துக்கொள்ளலாம். இச்சபை கி.பி. 1210ம் ஆண்டு துறவிகளின் சபையாக திருத்தந்தையால் அங்கீகாரம் பெற்றது. முதல்முதலில் ஆண் துறவிகளைக் கொண்டு துவங்கப்பட்ட இச்சபை பிறகு பெண் துறவிகளுக்கான சபையையும், பொதுநிலையினர் இணைந்து பணிபுரியும் பொதுநிலையினர் சபையையும் தோற்றுவித்தது. இவர்கள் யாவரும் திருச்சபையோடு இணைந்து விசுவாசத்தை வளர்த்தெடுப்பதில் பெரும்பங்காற்றி வருகின்றனர்.

அசிசி நகரில் வாழும் அரசர்களாலும், அரசியல்வாதிகளாலும் பெரும் பணக்காரர்களாலும் புறக்கணிக்கப்பட்ட மக்கள் அசிசி நகருக்கு வெளியே ஒதுக்கப்பட்டவர்களாக, தாழ்த்தப்பட்டவர்களாக வாழ்ந்து வந்தனர். இவர்களது வாழ்வைக் கண்ட பிரான்சிஸ் அசிசியார் இவர்களது துயர் துடைக்க முயல்கின்றார். அதற்கு ஒரே வழி அவர்களிடையே அவர்களில் ஒருவராக வாழ்வதுதான் என்று சிந்தித்தவராக, இறைவனின் துணையோடு தன்னுடைய பெரும் செல்வந்தர் வாழ்வைத் துறந்து ஏழைகளோடு ஏழையாக வாழ ஆரம்பிக்கின்றார். தேவைப்படுகிறவர்களுக்கு உதவிகளையும் செய்கின்றார். இவரது துறவு வாழ்வைக் கண்ட ஒருசிலர் இவரோடு இணைந்து கொள்கின்றனர். இப்படி சேர்ந்த பன்னிரண்டு பேர் பிரான்சிஸ்கன் சபையைத் துவங்குகின்றனர். இவர்களது முக்கிய நோக்கம் ஏழை எளியவருக்கு உதவிகள் செய்வது, சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வை போக்குவதற்கு உழைப்பது, மக்களிடையே சகோதர உறவை பெருகச் செய்வது, ஆண்டவர் இயேசுவின்மீது முழு நம்பிக்கை வைப்பது. துவக்கத்தில் எதிர்ப்புகள் இருந்தாலும் இக்குழுவினரின் தியாகச் செயல்களால் கவரப்பட்டு அநேகர் இவர்களோடு இணைந்தனர். இன்றைக்கு இச்சபையினர் உலகம் முழுவதும் பரவி பணி செய்து வருகின்றனர். திருச்சபையின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றி வருகின்றனர். திருச்சபையில் செய்ய முடியாத காரியங்களை இவர்கள் செய்வதினால் தனித்துவம் பெற்றனர். திருச்சபை நுழைய முடியாத இடங்களிலெல்லாம் இவர்களின் துறவிகள் நுழைந்து இறைப்பணியாற்றி திருச்சபைக்கு உதவியாக இருந்து வருகின்றனர்.

புனித இக்னேஷியஸ் லொயோலா அவர்களால் "இயேசு சபை" என்கிற துறவிகள் சபை கி.பி. 1541ல் திருத்தந்தையால் அங்கீகாரம் பெற்று துறவற சபையாக இயங்கி வருகிறது. இவர்களது முக்கிய நோக்கம் மக்களுக்கு கல்விப்பணி செய்வதும், மக்களுக்கு தங்கள் வாழ்வு குறித்த உரிமைகள், கடமைகள் ஆற்றவேண்டிய பணிகள் குறித்து விழிப்புணர்வு வழங்குவதும் ஆகும். இதற்காக தேவைப்படும் இடங்களில் எல்லாம் தங்களது பணித்தளங்களை உருவாக்கி தனது துறவிகளை அங்கு அனுப்பிவைத்து மக்களை எழுச்சியூட்டி வருகின்றனர். அவர்களது வாழ்க்கைத் தரத்தை அவர்களைக்கொண்டே உயர்த்துவது இவர்களது தனிச்சிறப்பாகும். குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களிடையே மலைவாழ் மக்களிடையே இவர்களது பணி சவால்கள் நிறைந்த பணியாக அதிகார வர்க்கத்தின் எதிர்ப்புகளை சந்திக்கிற சமாளிக்கிற பணியாக இருக்கிறது. மக்களை விழிப்படையச் செய்வது இயேசுவின் பணிகளில் ஒன்று. அதைத்தான் இவர் செய்துவருகிறார். திருச்சபை நுழைய முடியாத பணித்தளங்களில் இவர்கள் திருச்சபையின் தூதுவர்களாக செயல்பட்டு பெரும்பணியாற்றுகிறார்.

அடுத்து இவர்களது கல்வி நிறுவனங்கள், இன்று இவர்கள் நடத்தும் கல்வி நிறுவனங்கள் என்றாலே அங்கே கல்வியுண்டு. கண்ணியம் உண்டு, கட்டுப்பாடு உண்டு என்ற சாதாரண மக்களும் அறிவர். இவர்களது கல்வி நிறுவனங்களில் படித்தவர்களுக்கு சமுதாயத்தில் மதிப்பும், மரியாதையும் அதிகம் உண்டு. வெறும் ஏட்டுக் கல்வியுடன் நின்று விடாமல் சமுதாயத்தில் பல்வேறு நிலைகளில் பின்தங்கி இருக்கும் மாணவ மாணவியருக்கும் அவர்களது வாழ்க்கைத்தரம் உயர உழைத்து வருகிறது. அவர்களின் வளர்ச்சி என்பது திருச்சபையின் வளர்ச்சியாகவே கருதப்படுகிறது. இவர்களால் கிறிஸ்தவம் வளர்கிறது, திருச்சபை பெரிதும் வளர்கிறது.

இவர்களுக்கு அடுத்து புனித ஜான்போஸ்கோ அவர்கள் சலேசிய சபையை கி.பி. 1859ல் துவங்குகின்றார். இவரது முக்கிய நோக்கங்களில் ஒன்று இளைஞர்களை ஒன்றுதிரட்டி, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தி, ஆண்டவருக்குப் பிரியமாணவர்களாக அவர்களை மாற்றுவதுதான். மற்றொன்று கல்வி நிறுவனங்களை உண்டாக்கி மக்களுக்கு கல்வியறிவு தருவதாகும். இவரைப்பின்பற்றி இவரது சபையினர் உலகமெங்கும் கல்வி நிறுவனங்களை உண்டாக்கி பணி செய்து வருவதை நாம் நன்கு அறிவோம். பெண் கல்வியை ஊக்கப்படுத்தும் விதமாக பெண் துறவிகளின் சபையையும் இவர் தோற்றுவித்தார். புனித ஜான்போஸ்கோவைப் பின்பற்றி இவரது சபையினர் நடத்தும் கல்வி நிறுவனங்கள், இளைஞர் பயிற்சி பாசறைகள், விடுதிகள், முதியோர் இல்லங்கள், தொழிற்கல்வி கூடங்கள், "வழிகாட்டி" போன்ற வேலைவாய்ப்பு நிறுவனங்கள் ஏராளம், ஏராளம். இவர்களது தனித்துவமான இப்பணிகளை வேறு எந்த சபையாரும் செய்திட இயலாது. அதனாலேயே இவர்களது பணி மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இவர்களால் திருச்சபை மென்மேலும் வளர்ச்சிப் பெற்றுள்ளது என்றால் அது மிகையாகாது.

இறுதியாக நாம் வாழும் இக்காலத்தில் துவங்கப்பட்டு, நாம் பார்த்து வளர்ந்த துறவிகள் யாரென்றால் புனித அன்னை தெரசாள் ஆரம்பித்த "மிஷனரிஸ் ஆப் சாரிட்டி" ஆகும். கி.பி. 1950ம் ஆண்டு திருத்தந்தையால் அங்கீகரிக்கப்பட்ட சொற்ப ஆண்டுகளிலேயே உலகமெங்கும் பரவி பணித்தளங்களை நிறுவி பணி செய்தது. இவ்வாறு மிக முக்கிய நோக்கம் ஏழைகளையும், அனாதைகளையும், கைவிடப்பட்ட நோயாளிகளையும் மரணத் தருவாயில் யாருடைய ஆதரவும் இல்லாதவர்களையும் எயிட்ஸ் நோயாளிகள், மன நோயாளினால் குறைபாடுகளுள்ள குழந்தைகளையும் பேணிபாதுகாப்பதுதான். நினைத்துக்கூட பார்க்காத இவர்களது பணி பெரிதும் போற்றப்பட்டது. துவக்கத்தில் ஏளனப் பேச்சாளர்களாலும் பொருளாதார தேவைகளினாலும் மிகவும் கஷ்டப்பட்ட இவர்களது பணி தொடர்ந்து சோர்வில்லா பயணத்தினாலும் தியாகம் நிறைந்த வாழ்வினாலும் மக்களை பெரிதும் கவர்ந்தது. இவர்களது பணியினைக் கண்டு வெறுத்த பலரும் இவர்களுக்கு உதவிகள் செய்ய முன்வந்தனர். அதன் பலனாக புதிய புதிய பணித்தளங்களை உருவாக்கினர். சுமார் 45 நாடுகளில் பணித்தளங்களை விரிவுப்படுத்தினர். இரண்டுபேர் சேர்ந்து ஆரம்பித்த சபை 4000 துறவிகளுக்கு மேல் இணைந்து பணிபுரியும் மிகப்பெரிய இயக்கமாக மாறியது. இவரது மரணத்தின்போது சுமார் 50 நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் வந்திருந்து இவருக்கு இறுதி மரியாதை செலுத்தினார்கள் என்றால் என்னே இவர்களது உழைப்பு. இதனால் இந்திய திருச்சபை இன்னும் பெலன்கொண்டது. சகமனிதனில் இயேசுவைப் பார்க்கின்ற அன்னையின் பார்வை நம் ஒவ்வொருவரிடத்திலும் வந்துவிட்டால் நாமும் இவரைப்போல பணி செய்ய முடியும். இவர்கள் செய்துவருகின்ற இந்த சமுதாய பணியானது திருச்சபையின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றி வருகிறது என்பது உண்மையிலும் உண்மை.

மேற்கூறப்பட்ட துறவற சபைகளெல்லாம் ஒரு உதாரணம்தான்.இவை தவிர்த்து எண்ணற்ற பெண் துறவிகள் சபைகளும், ஆண் துறவிகள் சபைகளும் திருச்சபையின் தூண்களாக இயங்கி திருச்சபையை தாங்கி வருகின்றது. ஆயரக்கணக்கான துறவற சபைகளும் அவற்றின் கிளைகளும், இலட்சக்கணக்கான துறவிகளும் இணைந்து திருச்சபையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருவதை நாம் நன்கு அறிவோம். கல்விப் பணியானாலும், சமுதாய பணியானாலும் இளைஞர்களுக்கு வழிகாட்டும் பணியானாலும் அனாதைகள், நோயாளிகள், மரண நிலையில் இருப்போர் இவர்களுக்கான பணியானாலும், வேதப்போதகப் பணியானாலும் எல்லாவற்றிற்கும் பெரும் பங்கு வகிப்பது துறவற சபைகளே என்றால் அது மிகையாகாது.

துறவிகள் சபை பெருகட்டும்

துன்புறும் மனித இனம் மகிழட்டும்

தூயவனின் துணை நம்மோடு இருக்கட்டும்

துணிந்து பல தொண்டுகள் நிகழட்டும்

துணையாக நமது கரம் இணையட்டும்

தூயவரின் புகழ் பரவட்டும்

தூய்மையான மக்களாய் மலரட்டும்

## திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன்

1. சமுதாயம் எதிர்நோக்கும் சவால்களுக்குப் பணியாற்றும் கிறிஸ்தவர்களுக்காக, சனவரி மாதத்தில் சிறப்பாகச் செபிக்குமாறு உலகினரை கேட்டுக்கொண்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். சமுதாயம் எதிர்நோக்கும் சவால்களுக்குப் பணியாற்றுவதன் வழியாக கிறிஸ்தவ சபைகளுக்குள் முழு ஒன்றிப்பு ஏற்படும் என்று சனவரி மாதச் செபக் கருத்து பற்றிய காணொளிச் செய்தியில் கூறியுள்ளார் திருத்தந்தை. இன்றைய உலகில் பல்வேறு கிறிஸ்தவ சபைகளைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் ஒன்றாக இணைந்து உதவி தேவைப்படும் மனித சமுதாயத்திற்குப் பணியாற்றுகின்றனர் என்றும் மனித வாழ்வு, மனித மாண்பு, படைப்பு ஆகியவை மதிக்கப்பட அநீதிகளை எதிர்த்தும் செயல்பட்டு வருகின்றனர் என்றும் திருத்தந்தை தனது காணொளிச் செய்தியில் கூறியுள்ளார். நலிந்தவர்கள் மற்றும் துன்புறும் மக்களோடு ஒருமைப்பாட்டுணர்வு கொண்டு அவர்களுக்கு ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கு ஏற்பட்டுள்ள ஆவல் நம் எல்லோருக்கும் மகிழ்வின் ஊற்றாக அமைந்துள்ளது என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். ஒவ்வோர் ஆண்டும் சனவரி 18முதல் 25 வரை கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

2. "வன்முறையற்ற அகிம்சை வழியைக் குறித்து இயேசு சொல்லித்தந்தவற்றை முழுமையாக ஏற்று பின்பற்றுவது அவரது உண்மையான சீடர்களின் இலக்கணம்" என்ற வார்த்தைகள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் டுவிட்டர் செய்தியில் இடம்பெற்றன. "உங்கள் எல்லாரின் பாசத்திற்கு மிக்க நன்றி. எனக்காகச் செபிப்பதற்கு தயவு செய்து மறக்காதீர்கள்" என்ற வார்த்தைகள் திருத்தந்தையின் டுவிட்டர் செய்தியாக இச்சனிக்கிழமையன்று வெளியாயின. திருத்தந்தையின் டுவிட்டர் செய்திகளைப் பின்பற்றுவோரின் எண்ணிக்கை 2017ஆம் ஆண்டின் துவக்கத்தில் 32 மில்லியன் அதாவது 3கோடியே 20இலட்சத்திற்கும் அதிகமாக உள்ளது @pontifex என்ற முகவரியுடன் ஒன்பது மொழிகளில் திருத்தந்தை வெளியிட்டு வரும் டுவிட்டர் செய்திகளைப் பின்பற்றுவொரில் இஸ்பானியர்கள் 1கோடியே 20 இலட்சம் என்றும் அதற்கடுத்ததாக ஆங்கில மொழியினர் 1கோடியே 2இலட்சம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. திருத்தந்தையின் செய்திகளை இலத்தீன் மொழியில் பின்பற்றுவோர் 7இலட்சத்து 35,000 பேர் என்பதும் அரேபிய மொழியில் பின்பற்றுவோர் 3 இலட்சத்து 50,000 என்பதும் குறிப்பிடத்தக்கன.

3. வத்திக்கானில் சிறப்பிக்கப்பட்ட ஆண்டவரின் திருமுழுக்கு விழாவன்று வத்திக்கானின் சிஸ்டீன் சிற்றாலயத்தில் திருப்பலி நிறைவேற்றி 15 ஆண் மற்றும் 13 பெண் குழந்தைகளுக்கு திருமுழுக்கு அருளடையாளத்தை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்நிகழ்வுக்கு தங்கள்

குழந்தைகளைக் கொண்டு வந்திருந்த பெற்றோர் மற்றும் ஞானப்பெற்றோரிடம் தாங்கள் பெற்றுள்ள விசுவாசம் எனும் கொடையைப் பேணிப் பாதுகாத்து வளர்த்து பிறருக்குச் சான்றுகளாக வாழுமாறு கேட்டுக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

4. இறையழைத்தலை ஊக்குவிக்கும் மேய்ப்புப்பணி அக்கறையை மையப்படுத்தி இத்தாலிய ஆயர் பேரவை உரோம் நகரில் நடத்திய ஒரு கருத்தரங்கில் கலந்துக்கொண்ட 800க்கும் அதிகமான உறுப்பினர்களை சந்தித்த திருத்தந்தை இறையழைத்தலுக்கு இளையோர் தரும் சம்மதத்தை ஓர் நீர் ஊற்றுக்கு ஒப்புமைப்படுத்திப் பேசினார். தூய்மையான நீர் நாம் மேற்கொள்ளும் பயணத்திற்கு சக்தி சேர்ப்பதுபோல இறைவனின் அழைத்தலுக்கு இளையோர் தரும் சம்மதம் அவர்கள் மேற்கொள்ளும் பணிவாழ்வு என்ற பயணத்திற்குத் தேவையான சக்தியை வழங்குகிறது என்று தன் உரையில் எடுத்துரைத்தார் திருத்தந்தை. இளையோரையும் இறையழைத்தலையும் மையப்படுத்தி இத்தாலிய ஆயர் பேரவை ஏற்பாடு செய்த இந்தக் கருத்தரங்கு 2018ம் ஆண்டு கூடவிருக்கும் உலக ஆயர் மாமன்றத்திற்கு தகுந்ததொரு தயாரிப்பு என்பதையும் திருத்தந்தை தன் உரையில் சுட்டிக்காட்டினார். இறையழைத்தலை ஊக்குவித்து திருஅவை ஏடுகளும் திருத்தந்தையரும் கூறியுள்ள கருத்துக்களை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் உரையில் எடுத்துக்காட்டுகளாக வழங்கினார்.

5. ஏமன் நாட்டில் கடத்தப்பட்டுள்ள அருள்பணி டாம் உழுன்னலில் அவர்களின் விடுதலைக்கென சனவரி 1ம் தேதி புத்தாண்டு நாளன்று கேரள தலத்திருஅவை ஒருநாள் செப வழிபாடுகளை மேற்கொண்டது. கொச்சின் நகரில் நடைபெற்ற செப வழிபாட்டை சீரோ மலபார் கர்தினால் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்கள் முன்னின்று நடத்தினார். மேலும் சனவரி 4 புதனன்று பெங்களூரு சலேசிய குழுமங்கள் ஒருநாள் செப முயற்சிகளை மேற்கொண்டன. சனவரி 4ம் தேதி செபமும் உண்ணாநோன்பும் மேற்கொண்டு நற்கருணை ஆராதனையும் நடத்துமாறு பெங்களூரு சலேசிய தலைவர் அருள்பணி ஜாய்ஸ் அவர்கள் விண்ணப்பித்தார். இதற்கிடையே தன் விடுதலைக்கு இந்திய அரசம் திருஅவையும் கூடுதல் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று அருள்பணி டாம் அவர்கள் பதிவு செய்திருந்த விண்ணப்பம் ஒரு காணொளியாக டிசம்பர் 26ம் தேதி வெளியானது. அருள்பணி டாம் அவர்களை விடுவிக்கக்கோரி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஏப்ரல் 10ம் தேதி, புனித பேதுரு வளாகத்தில் வழங்கிய வாழ்த்தொலி உரையின்போது விண்ணப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவரைக் கடத்திச் சென்றவர்கள் யார் என்பது தெளிவில்லாததாலும், ஏமன் நாட்டில் நிலையான ஆட்சி இல்லாததாலும், அருள்பணி டாம் அவர்களின் விடுதலையை துரிதப்படுத்த முடியவில்லை என்று இந்திய அரசின் தரப்பில் கூறப்படுகிறது. ஏமன் நாட்டின், ஏடன் நகரில் மார்ச் 4ம் தேதி அருள்பணி டாம் அவர்கள் கடத்தப்பட்டு, சனவரி 04ம் தேதியோடு, பத்து மாதங்கள் நிறைவடைகின்றன என்பது குறிப்பித்தக்கது.

## சுடர் வாசகர் போட்டி 31 சரியான விடைகள்

1. ஜரின்
2. 500 ரூபாய்
3. முத்தி ஜோசப் வாஸ்
4. "அருட்பணியாளர் அழைப்பு என்ற கொடை"
5. கிறிஸ்டோபர் வாஸ், மரிய தே மிராண்டா
6. இந்திய கிறிஸ்தவர்களின் உலகளாவிய அவைத் தலைவர் சாஜன் ஜார்ஜ்
7. 2012 டிசம்பர் 2
8. மம்மா மார்கரேட், தொன்போஸ்கோவை நோக்கி கூறியது.
9. அருளாளர் தேவசகாயம்.
10. தூய ஆல்பர்ட், தூய அக்குவினாஸைக் குறித்து கூறியது.
11. எண்ணாகமம் : 24:17
12. 94
13. தூய ஜான் நியூமேன்
14. தூய அஞ்ஞேஸ்
15. நாம் ஒரே குடும்பம் ஒவ்வொரு இல்லமும் வாழ்வின் அன்பின் கல்விக் கூடம்.

**குலுக்கல் முறையில் வெற்றி பெற்றவர்கள்**

அ. ஆரோக்கிய தாஸ் 11வகுப்பு, திருப்பத்தூர்
சகோ. புஷ்பா, கீரனூர்-புதுக்கோட்டை
சகோ. நிர்மலா மேரி, திருச்சி

## அடுத்த சுடரில்

**பகுதி 1 வழிபாட்டு வழிக்காட்டி**

விபூதி புதன்
தவக்கால வெள்ளிக்கிழமைகள் - 5
தவக்கால ஞாயிறுகள் - 4
புனித மரியாவின் கணவர் சூசையப்பர் பெருவிழா
கிறிஸ்து பிறப்பு முன்னறிவிப்பு பெருவிழா
சிலுவைப் பாதைகள் - 3

**பகுதி 2 விசுவாசத்தில் வளர...**

சூசையப்பர் - கிறிஸ்தவ உழைப்பின் முன்னோடி
தவக்காலம் தரும் சவால்கள்
தவக்காலத்தில் குடும்பமாய் செய்யக் கூடியது என்ன?
திருச்சபை செய்திகள்

## சுடர் வாசகர் போட்டி - 32

1. குழந்தை இயேசுவை எத்தனை நாளுக்கு பிறகு காணிக்கையாக அளித்தார்கள்?
2. தடியத் தேவரை மனம்மாற்றிய புனிதர் யார்?
3. ஜப்பான் நாட்டில் நாகசாகியில் 1897ல் மறித்த இந்திய இளைஞர் யார்?
4. எங்கள் கருப்புத் தாய் என்று அழைக்கப்பட்ட புனிதை யார்?
5. தூய ஆசிர்வாதப்பரின் தங்கையின் பெயர் என்ன?
6. தூய லூர்து அன்னை காட்சியளிக்கும் போதெல்லாம் எந்த கருத்திற்காக செபிக்கும் படி கேட்டுக் கொண்டார்?
7. இறையழைத்தலுக்கு இளையோர் தரும் சம்மதத்தை திருத்தந்தை எதற்கு ஒப்பிட்டு பேசினார்?
8. தொண்டை நோய் குணம்பெற எந்த புனிதர் வழியாக மன்றாடுவது மரபு?
9. கொன்சாலோ கார்சியா இறக்கும் போது கூறிய வார்த்தைகள் என்ன?
10. எங்கள் அன்னை மரியே "எங்கள் அன்னை மரியே" என்று உச்சரித்தவாறு உயிர் துறந்த புனித யார்?
11. தூய ஸ்கொலாஸ்திக்கா இறந்த பிறகு அவரது ஆன்மா புறா வடிவில் விண்ணகத்திற்கு செல்வதைக் கண்ட புனிதர் யார்?
12. 12ஆம் லியோ திருச்சபையின் மருத்துவர் என்று யாருக்கு பெயரிட்டார்?
13. துறவறத்தார்க்கு நற்செய்தியின் அறிவுரைகளான வார்த்தைப்பாடுகளாக ஆசிரியர் கூறுவது யாது?
14. ஆண்டவரின் திருமுழுக்கு தினத்தன்று திருத்தந்தை எத்தனை குழந்தைகளுக்கு திருமுழுக்கு அளித்தார்?
15. பல்கேரிய மன்னனுக்கு தூய மெத்தோடியூஸ் வரைந்து காட்டிய படம் எது?

என்னை அனுப்பும் தெய்வமே
உம் மக்களின் விடுதலைக்காய்
என்னைத் தேர்ந்ததுவும் நீதான் என்றாய்
என்னை அழைத்ததுவும் நீ தான் என்றாய்

நான் சிறுவன் என்றேன் சொல்லாதே என்றாய்
ஐயோ பயம் என்றேன் அஞ்சாதே என்றாய்
பேசவும் தெரியாது என்றேன் பேசுவதோ நீ என்றாய்
அசுத்த உதடுகள் என்றேன் அன்பின் தீயினால் சுட்டு விட்டாய்

என் சொற்களை உன் வாயில் வைத்துள்ளேன்
பிடுங்கவும் தகர்க்கவும் அழிக்கவும் கவிழ்க்கவும்
கட்டவும் நடவும் இன்று நான் உன்னைப்
பொறுப்பாளனாக ஏற்படுத்தியுள்ளேன்

நான் கலங்கி நின்றேன் கலங்காதே என்றாய்
நான் தயங்கி நின்றேன் ஏன் தயக்கமென்றாய்
பாதையும் தெரியாது என்றேன் பாதையுமே நீ என்றாய்
தகுதிகள் எனக்கில்லை என்றேன் உந்தன்
ஆவியால் என்னைத் தொட்டு விட்டாய் - என் சொற்கள்...

பிப்ரவரி 2017 மாதத்திற்கான வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1. | பு | | எபிரே12:4-7,11-15 | மாற்கு6:1-6 |
| 2. | வி | குழந்தை இயேசு காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட விழா | Iமலா3:1-4<br>IIஎபிரே2:14-18 | லூக்2:22-40 |
| 3. | வெ | புனித பிளேஸ் | எபிரே13:1-8 | மாற்கு6:14-29 |
| 4. | ச | புனித அருளானந்தர் | எபிரே13:15-17,20-21 | யோவா12:24-26 |
| 5. | ஞா | ஆண்டின் 5ம் ஞாயிறு | Iஎசா58:7-10<br>II1கொரி2:1-5 | மத்5:13-16 |
| 6. | தி | புனித கொன்சாலோ கர்சியா | தொநூ1:1-19 | மாற்கு6:53-56 |
| 7. | செ | | தொநூ1:20-2:4அ | மாற்கு7:1-13 |
| 8. | பு | புனித ஜோஸ்பின் பக்கித்தா | தொநூ2:4ஆ-9,15-17 | மாற்கு7:14-23 |
| 9. | வி | | தொநூ2:18-25 | மாற்கு7:24-30 |
| 10. | வெ | புனித ஸ்கொலாஸ்திக்கா | தொநூ3:1-8 | மாற்கு7:31-37 |
| 11. | ச | புனித லூர்து அன்னை | தொநூ3:9-24 | மாற்கு8:1-10 |
| 12. | ஞா | ஆண்டின் 6ம் ஞாயிறு | Iசீரா15:15-20<br>II1கொரி2:6-10 | மத்5:17-37 |
| 13. | தி | | தொநூ4:1-15,25 | மாற்கு8:11-13 |
| 14. | செ | புனித சிரில், புனித மெத்தோடியுஸ் | தொநூ6:5-8:7:1-5,10 | மாற்கு8:14-21 |
| 15. | பு | | தொநூ8:6-13,20-22 | மாற்கு8:22-26 |
| 16. | வி | | தொநூ9:1-13 | மாற்கு8:27-33 |
| 17. | வெ | | தொநூ11:1-9 | மாற்கு8:34-9:1 |
| 18. | ச | | எபி11:1-7 | மாற்கு9:2-13 |
| 19. | ஞா | ஆண்டின் 7ம் ஞாயிறு | Iலேவி19:1-2,17-18<br>II1கொரி3:16-23 | மத்5:38-48 |
| 20. | தி | | சீராக்1:1-10 | மாற்கு9:14-29 |
| 21. | செ | புனித பீட்டர் தமியான் | சீராக்2:1-11 | மாற்கு9:30-37 |
| 22. | பு | திருதூதர் பேதுருவின் தலைமைப் பீடம் | 1பேது5:1-4 | மத்16:13-19 |
| 23. | வி | புனித போலிக்கார்ப்பு | சீராக்5:1-8 | மாற்கு9:41-50 |
| 24. | வெ | | சீராக்6:5-17 | மாற்கு10:1-12 |
| 25. | ச | | சீராக்17:1-15 | மாற்கு10:13-16 |
| 26. | ஞா | ஆண்டின் 8ம் ஞாயிறு | Iஏசா49:14-15<br>II1கொரி4:1-5 | மத்6:24-34 |
| 27. | தி | | சீராக்17:20-29 | மாற்கு10:17-27 |
| 28. | செ | | சீராக்35:1-12 | மாற்கு10:28-31 |